மாண்புமிகு **அம்மா** அவர்களின் ஆட்சியின் தொடர்ச்சிதான் இந்த ஆட்சி. எனவே, **அம்மா**வின் எண்ணங்களையும், விருப்பங்களையும் ஈடேற்றும் அரசாகவே இந்த அரசு செயல்படும்.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. எடப்பாடி K.**பழனிசாமி** அவர்கள்

©
தமிழ்நாடு அரசு
2018

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2018–2019

# செய்தி மற்றும் விளம்பரம்

## மானியக் கோரிக்கை எண்.28

**கடம்பூர் ராஜூ**
**செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்**

# மானியக் கோரிக்கை எண்: 28
# செய்தி மற்றும் விளம்பரம்
# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 3 |
| 2 | செய்தி வெளியீட்டுப் பிரிவு | 6 |
| 3 | ஒளிப்படப் பிரிவு | 16 |
| 4 | மேற்கோள் பிரிவு | 18 |
| 5 | நினைவகங்கள் | 21 |
| 6 | அரசு விழாக்கள் | 33 |
| 7 | கள விளம்பரம் | 52 |
| 8 | விளம்பரம் | 56 |
| 9 | திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள் | 58 |
| 10 | திரைப்படத்துறையினர் நலவாரியம் | 64 |
| 11 | தமிழ்நாடு திரைப்படப் பிரிவு | 69 |
| 12 | எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் | 73 |
| 13 | திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு | 78 |
| 14 | தமிழரசு | 84 |
| 15 | பொருட்காட்சிப் பிரிவு | 90 |
| 16 | மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் | 96 |
| 17 | மாநிலச் செய்தி நிலையம், சென்னை | 98 |
| 18 | நிறைவுரை | 100 |

**"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையா னுழை"** **(குறள்–594)**

## முன்னுரை

இந்தியத் திருநாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தீட்டிச் செயல்படுத்திய புதுமையான நலத்திட்டங்களால் எண்ணற்ற ஏழை எளிய மக்கள் பயனடைந்தனர்.

தமிழகம் எதிர் கொண்ட ஈடுசெய்ய இயலாத பேரிழப்பாக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இப்பூவுலகை விட்டுப் பிரிந்தாலும், மக்களுக்கு அம்மா அவர்கள் அளித்த உறுதிமொழியைக் காப்பாற்றி, தமிழக மக்களின் வாழ்வில் வளமும் நலமும் சேர்த்திட வேண்டும் என்னும் அம்மா அவர்களின் எண்ணத்தை ஈடேற்றிட, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள், அம்மா அவர்களது வழியில், ஆட்சித் தேரை அழகுறச் செலுத்திக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வகுத்துத்தந்த பாதையில் பீடுநடை போட்டவாறு செயல்படுத்துகின்ற மக்கள் நலத் திட்டங்களை, மாநிலத்தின் முன்னேற்றத்திற்கான வளர்ச்சிப் பணிகளை துறைதோறும் படைக்கின்ற சாதனைகளை

மக்களிடம் கொண்டு சேர்க்கின்ற மகத்தான பணிகளை செய்தி மக்கள் தொடர்புத்துறை புதிய எழுச்சியோடு செயலாற்றி வருகிறது.

சோர்வு இல்லாத ஊக்கம் உடையவரிடத்தில், ஆக்கமானது, தானே அவர் உள்ள இடத்திற்கு வழிகேட்டு வந்து சேரும் என்னும் வள்ளுவரின் வாய்மொழியை இதயத்தில் ஏந்தி, அரசு வெளியிடுகின்ற புதிய அறிவிப்புகளை, செயல்படுத்துகின்ற திட்டங்களை, படைத்து வரும் சாதனைகளை,

- ★ ஊடகங்கள் முதலான மக்கள் தொடர்புச் சாதனங்கள் வாயிலாகவும்...
- ★ பொருட்காட்சிகள், புகைப்படக் கண்காட்சிகள் மூலமாகவும்...
- ★ அரசின் விளம்பரங்கள் வழியாகவும்...
- ★ அச்சு வடிவாக்கி வெளியிடப்படும் அரசின் தமிழரசு மற்றும் சிறப்பு வெளியீடுகள் மூலமும்...
- ★ ‘‘செய்தி மலர்கள்’’ தயாரித்து, கிராமங்களிலும் திரையரங்குகளிலும் திரையிட்டு மக்கள் காணச் செய்வதன் வாயிலாகவும்...

எனப் பல்வகையிலும் விளம்பரப் பணிகள் மேற்கொண்டு, மக்களிடம் கொண்டு சேர்க்கும் சீரிய பணிகளைச் செய்தி மக்கள் தொடர்புத்துறை சிறப்புடன் செய்து வருகிறது.

அதுமட்டுமன்றி,

விடுதலைப் போராட்டத் தியாகிகள், தமிழ்ச் சான்றோர் மற்றும் நாட்டுக்கு உழைத்த நல்லோரின் நினைவுகளைப் போற்றி விழா எடுத்தல்... சான்றோர் வாழ்ந்த இல்லங்களைப் பராமரித்து அவர்தம் நினைவாக நினைவுச் சின்னங்கள் உருவாக்கிப் போற்றுதல்... திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பக் கலைகளை மாணவர்களுக்குப் பயிற்றுவித்து, நாளைய திரைக்கலைஞர்களை உருவாக்குதல்...

போன்ற பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொண்டு, தமிழகத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெற்றிடும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறை செம்மையுறச் செயலாற்றி வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களது தலைமையில், மக்கள் நலம் காக்க வெற்றிநடை போடும் தமிழ்நாடு அரசுக்கும், தமிழக மக்களுக்கும் இடையே பாலமாய் அமைந்து, நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் வளர்த்து, வெளிப்படையான நிருவாகம் மேலோங்கிட வழிவகுக்கும் சிறப்பு மிக்க பணிகளைச் செய்தி மக்கள் தொடர்புத்துறை தொடர்ந்து தொய்வின்றி மேற்கொள்கிறது.

# செய்தி வெளியீட்டுப் பிரிவு

தமிழ்நாடு அரசின் தலைமையகமான சென்னைத் தலைமைச் செயலகத்தில் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன், எந்நேரமும் ஓய்வின்றி இயங்கிடும் இதயம் போல, ஆண்டின் அனைத்து நாள்களிலும் இருபத்து நான்கு மணி நேரமும் செயலாற்றி வரும் செய்தி வெளியீட்டுப்பிரிவு, செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சிறப்பானதொரு அங்கம் ஆகும்.

செய்தி வெளியீட்டுப்பிரிவின் வாயிலாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களின் செய்திக் குறிப்புகள், செய்தி வெளியீடுகள், அரசினுடைய அனைத்துத் துறை சார்ந்த அறிவிப்புகள், நலத்திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் குறித்த செய்திகள், அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான அனைத்துச் செய்திகள் காணொலிப் பதிவு மற்றும் வண்ணப் புகைப்படங்கள் ஆகிய அனைத்தும் உடனுக்குடன் மின்னஞ்சல் வாயிலாக, நாளிதழ்கள், செய்தி முகமைகள், காலமுறை நாளிதழ்கள், இணையத்தளச் செய்தி நிறுவனங்கள் உள்ளிட்ட 300க்கும் மேற்பட்ட ஊடக நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகின்றன.

மேலும், முக்கிய நிகழ்வுகள் தொடர்பான காணொலிக் காட்சிப்பதிவுகள் அனைத்தும், அதிநவீன முறையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் **www.tndipr.gov.in** வலைத்தளத்தில் உடனுக்குடன் அதிவேக முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டு, ஊடகங்களுக்கு வழங்கப்படுகின்றன. இதன் பயனாக,

முக்கிய நிகழ்ச்சிகளின் காணொலிப்பதிவுகள் அடுத்த சில நிமிடங்களிலேயே மக்கள் அறிந்து பயனடைகின்ற வகையில், ஊடகங்களால் ஒளிபரப்பப்படுகின்றன. மாவட்டங்களில் நடைபெறும் மிக முக்கிய விழாக்கள் அனைத்தும் அதிநவீனத் தொழில் நுட்பத்தில் ஊடகங்களுக்கு வழங்கப்பட்டு, அவை அடுத்த சில நிமிடங்களில் ஒளிபரப்பப்படுகின்றன.

தலைமையிடத்திலிருந்து அவ்வப்போது வெளியிடப்படும் முக்கிய அறிவிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகள் ஆகியவற்றை மாவட்டப் பதிப்புகளில் வெளியிட ஏதுவாக, அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் மின்னஞ்சல் வாயிலாக, உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படுகின்றன.

தவிர, மாவட்டங்களில் மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் பங்கேற்கும் முக்கிய நிகழ்ச்சிகள், விழாக்கள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் குறித்த செய்திகள், புகைப்படங்கள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் வெளியிடுவதோடு, மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் வாயிலாகத் தலைமையிடத்தில் பெறப்பட்டு, சென்னையிலிருந்து வெளியாகும் நாளிதழ்கள் மற்றும் பிற ஊடகங்களுக்கும் இப்பிரிவினரால் அனுப்பப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களின் செய்தியாளர் சந்திப்பு, மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள் பங்கேற்கும் விழாக்கள், முக்கியப்

பிரமுகர்கள் வருகை தொடர்பான செய்திகளைச் சேகரிக்கும் ஊடகப்பிரிவினருக்குத் தேவையான அனைத்து உதவிகளும் இச்செய்தி வெளியீட்டுப் பிரிவின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

ஊடகங்கள் செய்திகள் வெளியிட மேலைநாடுகள் பயன்படுத்துகிற தொழில்நுட்பங்களுக்கு இணையாக, அனைத்து வகையான உட்கட்டமைப்பு வசதிகளையும் உள்ளடக்கிய இப்பிரிவு திறம்படச் செயலாற்றி, துறைக்கும் அரசுக்கும் பெருமை சேர்த்து வருகிறது.

**பத்திரிகையாளர் நலன்**

## அ) பத்திரிகையாளர் ஓய்வூதியம்

ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படும் பத்திரிகையாளர்களின் நலன்களைப் போற்றிப் பேணுவதில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் பங்கு மகத்தானது. செய்திகளை மக்களுக்கு எடுத்துச் செல்லும் தலையாய பணியைத் தலைமேல் ஏற்று அயராது உழைத்து, தங்களது வாழ்வைக் கழித்த பத்திரிகையாளர்களுக்குத் தங்களது எஞ்சிய வாழ்வை இனிதே கழிக்க அரசு சார்பில் மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணிபுரிந்து ஓய்வு பெற்று நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற கடந்த 2011ஆம் ஆண்டிற்குப் பிறகு, 5,000 ரூபாயாக இருந்த ஓய்வூதியமானது,

மூன்று முறை உயர்த்தப்பட்டு, **8,000** ரூபாயாக வழங்கப்பட்டு வந்தது. தொடர்ந்து கடந்த **21.09.2017** அன்று அம்மா வழி நடக்கும் இவ்வரசால் நான்காவது முறையாக உயர்த்தப்பட்டு, தற்பொழுது மாதம் **10,000** ரூபாயாக வழங்கப்பட்டு வருகிறது. **2017–2018**ஆம் ஆண்டில் மட்டும் **34** பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக, மொத்தம் **196** பத்திரிகையாளர்களுக்கு மாத ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெறுவதை எளிதாக்கிடவும், இத்திட்டத்தில் அதிக எண்ணிக்கையில் பத்திரிகையாளர்கள் பயன்பெற்றிடவும் கடந்த **2012**ஆம் ஆண்டு முதல் பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்கொடையின் உச்சவரம்பானது, **1** இலட்சம் ரூபாயிலிருந்து **2** இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டதுடன், பணிக்காலத்தில் பத்திரிகையாளர்கள் பெற்று வந்த ஆண்டு வருமானத்திற்கான உச்சவரம்பானது, **1** இலட்சத்து **20** ஆயிரம் ரூபாயிலிருந்து **2** இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டு உள்ளது.

## ஆ) குடும்ப ஓய்வூதியம்

பத்திரிகையாளர்களின் நலன்களைப் பேணுவதுடன் அவர்களின் குடும்ப நலன்களைப் பாதுகாப்பதிலும் இந்த அரசு, அதிக அக்கறை கொண்டுள்ளது என்பதை எடுத்துக் கூறும் வகையில், பத்திரிகையாளர்களின் மறைவுக்குபின் அவர்களின் குடும்பங்களின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011ஆம் ஆண்டிற்குப் பிறகு 2,500 ரூபாயாக இருந்த குடும்ப ஓய்வூதியத்தை, மூன்று முறை உயர்த்தி 4,750 ரூபாயாக வழங்கி வந்தார்கள். அம்மா அவர்களின் வழி நடக்கும் இவ்வரசு இதனை மேலும் உயர்த்தி, 21.09.2017 அன்றுமுதல் பத்திரிகையாளர்கள் குடும்ப ஓய்வூதியம் மாதம் 5,000 ரூபாயாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக, 38 பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

## இ) குடும்ப உதவி நிதி

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழை திருத்துவோர் ஆகியோர் பணிக்காலத்தில் இயற்கை எய்தும் நேர்வில், அன்னாரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி விவரம் பின்வருமாறு :

| பணிபுரிந்த ஆண்டுகள் | குடும்ப உதவி நிதித் தொகை |
|---|---|
| 5 | ரூ. 50,000/– |
| 10 | ரூ. 1,00,000/– |
| 15 | ரூ. 1,50,000/– |
| 20 | ரூ. 2,00,000/– |

மேலும், இந்த ஆண்டு நடைபெற்ற பத்திரிகையாளர் ஓய்வூதியப் பரிசீலனைக்குழுக் கூட்டத்தில், மூன்று பத்திரிகையாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் குடும்ப உதவிநிதி வழங்கிடப் பரிந்துரை செய்யப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஈ) நல நிதியம்

பிற மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்ற வகையில், தமிழ்நாடு அரசு செயல்படுத்தியுள்ள '**பத்திரிகையாளர்கள் நலநிதியம்**' பத்திரிகையாளர்களின் நலன்களைப் பாதுகாத்திடும் மற்றுமொரு முத்தான திட்டம் ஆகும். இதற்கென நிரந்தர நிதியாகத் 'தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில்' ஒரு கோடி ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வைப்பீட்டுத் தொகை வாயிலாகக் கிடைக்கப் பெறும் வட்டித்தொகையிலிருந்து பத்திரிகையாளர்கள் பணிக்காலத்தில் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிச்சை மேற்கொள்ளும் பொழுது, அவர்களுக்கு மருத்துவ உதவி நிதியாக, அதிகபட்சமாக 50,000 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. மேலும், கடந்த ஆண்டு 25.10.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கேற்ப, சிறப்பு நேர்வாக, ஒரு பத்திரிகையாளரின் மருத்துவச் சிகிச்சைக்காக 3.50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

## உ) அரசு வாடகைக் குடியிருப்பு

பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வாடகைக் குடியிருப்புகள் அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டில் சென்னை மற்றும் ஏனைய மாவட்டங்களில் குறைந்த வாடகையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

## ஊ) வீட்டுமனை வசதி

இத்திட்டத்தின் வாயிலாக, மாவட்டங்களில் பணியாற்றி வரும் செய்தியாளர்களுக்குச் சொந்த வீடோ அல்லது வீட்டு மனையோ இல்லாத நிலையில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மூலம் சலுகை விலையில் வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. கடந்த 7 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 320 பத்திரிகையாளர்களுக்குச் சலுகை விலையில் வீட்டுமனைகள் வழங்கப்பட்டுள்ளன.

## எ) செய்தியாளர் அங்கீகார அட்டை

அரசு விழாக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போது செய்திகள் சேகரித்திட ஏதுவாக, அரசால் அமைக்கப்பட்டுள்ள "செய்தியாளர் அங்கீகாரக் குழு"வின் பரிந்துரையின் பேரில், ஆண்டு தோறும் 1,150க்கும் மேற்பட்ட நாளிதழ்கள் / தொலைக்காட்சிகள் / செய்தி நிறுவனங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்களுக்குச் **"செய்தியாளர் அங்கீகார அட்டை"** வழங்கப்பட்டு வருகிறது.

## ஏ) செய்தியாளர் அட்டை

அதேபோல், "செய்தியாளர் அட்டைக்குழு"வின் பரிந்துரையின் பேரில், காலமுறை இதழ்களில் பணியாற்றும் செய்தியாளர்களுக்கும், ஆண்டுதோறும் 700க்கும் மேற்பட்ட **"செய்தியாளர் அடையாள அட்டைகள்"** வழங்கப்படுகின்றன. இதன் பயனாக, செய்தியாளர்கள் முக்கிய இடங்களுக்குச் சென்று கட்டுரைகள், வரலாற்று விவரங்கள், செய்திகளின்

பின்னணி ஆகியவை குறித்த உண்மைத் தன்மையினை அறிந்து, செய்திகள் வெளியிடப் பெரிதும் உதவியாக அமைகிறது.

## ஐ) செய்தியாளர்களுக்கான கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டை

களநிலவரங்களை நேரில் சென்று அறிந்திட ஏதுவாக, அங்கீகார அட்டை பெற்றுள்ள அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்திட, ஆண்டுதோறும் '**கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டை**' வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியர் பரிந்துரையின் பெயரில், செய்தியாளர்களுக்குக் கட்டணமில்லாப் பேருந்து அட்டை வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் இத்திட்டத்தின் கீழ்ச் சென்னை மற்றும் விழுப்புரம் பகுதியைச் சேர்ந்த 502 பத்திரிகையாளர்களுக்கும், ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த 2,041 பத்திரிகையாளர்களுக்கும் கட்டணமில்லாப் பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினமானது, இத்துறையின் மூலம் போக்குவரத்து கழகங்களுக்குச் செலுத்தப்பட்டு வருகிறது.

## ஓ) செய்தி முகமைகள்

இந்திய பத்திரிகையாளர் சங்கம், (PTI) இந்திய ஐக்கியச் செய்திகள் முகவரமைப்பு (UNI) ஆகிய இரண்டு செய்தி முகமைகள் வெளியிடும் செய்திகள் மாண்புமிகு ஆளுநர் மாளிகை, செய்தி வெளியீட்டுப் பிரிவு, தலைமைச்

செயலகம் ஆகிய இடங்களில் கணினி வாயிலாக, 24 மணிநேரமும் பெறப்படுகின்றன. நாடு தழுவிய மிக முக்கியச் செய்திகள் உரிய நடவடிக்கைக்காகத் துறைத் தலைவர்களின் கவனத்திற்கு உடனுக்குடன் அனுப்பப்படுகின்றன.

## ஓ) செய்தி மக்கள் தொடர்புத்துறை வலைத்தளம்

விஞ்சிடும் விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக, இன்று பூமி, உள்ளங்கைப் பந்து போல் ஆகிவிட்டது. குறிப்பாக, கணினி யுகத்தில், வலைத்தளங்கள் அசுர வளர்ச்சி கண்டுள்ளன. ஊடகங்கள் மற்றும் நாளிதழ்களின் பயன்பாட்டிற்கென்றே செய்தி மக்கள் தொடர்புத்துறையால் **www.tndipr.gov.in** என்னும் முகவரியுடன் அதிநவீன வலைத்தளமானது உருவாக்கப்பட்டு, மிகச் சிறந்த முறையில், நிமிடத்திற்கு நிமிடம் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. அரசு சார்ந்த செய்திகள், புகைப்படங்கள் மற்றும் காணொலிக்காட்சிப் பதிவுகள் அனைத்தும் மிக அதிவேகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, ஊடகங்கள் தங்களுக்குத் தேவையானவற்றை உடனுக்குடன் பெற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த வலைத்தளம் உலகெங்கிலுமுள்ள தமிழர்களும், பொதுமக்களும் தமிழகத்தின் அன்றாட நிகழ்வுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளப் பெரிதும் பயன் தரும் வகையில் சிறந்த வலைத்தளமாக உள்ளது என்றால் அது மிகையில்லை.

## ஔ) ஊடக மையம்

இத்துறையின் மற்றுமொரு அங்கமான, மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அமைக்கப்பட்ட ஊடக மையத்தின் பணி மகத்தானது. தலைமைச் செயலகச் செய்தியாளர்களின் பயன்பாட்டிற்கு 24 மணி நேரமும் இயங்கி வரும் செய்தி வெளியீட்டுப் பிரிவைப் போலவே ஊடக மையமும் கால நேரம் பாராமல் இயங்கி வருகிறது.

தலைமைச் செயலகத்திலிருந்து வெளியிடப்படும் செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள் மற்றும் புகைப்படங்கள் அனைத்தும் ஊடக மையத்திலிருந்து சென்னையில் உள்ள அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பப்படுவதோடு, அனைத்து மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டு, அந்தந்த மாவட்டப் பதிப்புகளில் வெளியிட ஆவன செய்யப்படுகிறது. அந்தந்த மாவட்டங்களில் வெளியான செய்தி விவரங்கள் யாவும் (Feedback) மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களால், ஒவ்வொரு நாளும் தலைமைச் செயலகத்திலுள்ள இம்மையத்திற்குத் தவறாமல் அனுப்பப்படுகின்றன.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்பான செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள் மற்றும் புகைப்படங்கள் ஆகியன மாவட்ட நாளிதழ்களிலும் சரிவர வெளியிடப்படுகின்றனவா என்கிற விவரங்களும், இம்மையத்தின் வாயிலாகக் கண்காணிக்கப்படுகின்றன.

## ஒளிப்படப் பிரிவு

தலைமைச் செயலகத்தில் செயல்படும் ஒளிப்படப்பிரிவின் வாயிலாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் அரசு விழாக்கள் நடைபெறும் இடத்திலிருந்து எடுக்கப்படும் ஒளிப்படங்கள், இணையதள வசதியுடன் கூடிய மடிக்கணினிகள் மூலம் நாளிதழ் மற்றும் ஊடகங்களுக்கு உடனுக்குடன் அனுப்பப்பட்டு வருகின்றன. முக்கிய நிகழ்வுகள் தொடர்பான ஒளிப்படங்கள் பொதுமக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், தலைமைச் செயலக முதன்மைக் கட்டடத்திலும், புதுதில்லி தமிழ்நாடு இல்லத்திலும் காட்சிப்படுத்தப்படுகின்றன.

ஆவணப்படுத்துதல் என்பது மிகவும் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். எதிர்காலத் தேவையினைக் கருத்தில் கொண்டு, தலைமைச் செயலக ஒளிப்படப்பிரிவின் வாயிலாக எடுக்கப்படும் அரசின் அனைத்துத் துறை சார்ந்த முக்கிய நிகழ்வுகள் குறித்த ஒளிப்படங்கள் மற்றும் காணொளிப் பதிவுகள் (videos) அனைத்தும், குறுந்தகடு மற்றும் நிலைவட்டுகளில் (Hard Disk) மிகுந்த பாதுகாப்புடன் ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடைபெற்ற பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக்களில், இத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட ஒளிப்படக் கண்காட்சியில் வைக்கப்பட்ட மிகமிக அரிதான ஒளிப்படங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்,

மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் ஆகியோரின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றதோடு, கண்டு இரசித்த பொதுமக்களையும் தாய்மார்களையும் பெரிதும் கவர்ந்து அவர்களது உளமார்ந்த பாராட்டுகளைப் பெற்றன.

ஒளிப்படக்கலையில் வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பத்திற்கேற்ப, அதிநவீன ஒளிப்படக்கருவிகளைக் கொண்டு டிஜிட்டல் முறையில் ஒளிப்படங்கள் எடுக்கப்படுவதோடு, அவற்றை மிக நவீன முறையில், குறிப்பாக ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கும் மேலான ஒளிப்படங்களை, வரலாற்று ஆவணங்களாக, அரிய பொக்கிஷங்களாக, பாதுகாத்திடும் உயரிய பணியை, ஒளிப்படப்பிரிவு மேற்கொண்டு, திறம்படச் செயலாற்றி வருகிறது.

## மேற்கோள் பிரிவு

தலைமைச் செயலகத்தில் செயல்படும் மேற்கோள் பிரிவின் வாயிலாக, நாளிதழ்கள், பருவ இதழ்கள், வெளிமாநில நாளிதழ்கள் போன்றவற்றில் வெளிவரும் முக்கியச் செய்திகள் அனைத்தும் மிகச் சிறந்த முறையில் துறைவாரியாக, பல்வேறு இனங்களாகப்பிரிக்கப்பட்டு,நாள்தோறும் அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்லும் மிக முக்கியப் பணியை இப்பிரிவு சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்காக, காலை, மாலை நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வெளிமாநில நாளிதழ்களில் வெளியாகும் முக்கியச் செய்திகள், செய்தி நறுக்குகளாகத் தொகுத்து அனுப்பி வைக்கப்படுகின்றன. இப்பணி தினந்தோறும் அதிகாலையிலேயே தொடங்கப்பட்டு, காலையும் மாலையும் உடனடியாக அனுப்பப்படுகிறது. விடுமுறை ஏதுமின்றி, இப்பிரிவின் வாயிலாக, இப்பணிகள் அனைத்தும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், நாளிதழ்கள், பருவ இதழ்களில் வெளிவரும் முக்கியச் செய்திகள் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் மற்றும் துறைச் செயலாளர்களின் பார்வைக்கும், நடவடிக்கைக்குமாகத் தொகுத்து, நாள்தோறும் அனுப்பப்படும் பணியும், இப்பிரிவால் செவ்வனே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதேபோன்று, நாளிதழ்களில் அனைத்துத் துறைகள் குறித்து வெளிவரும் முக்கியச் செய்திகள் ‘உள்ளறி’ (Scan) செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களுக்கு நாள்தோறும் காலையில் மின்னஞ்சலில் அனுப்பப்பட்டு வருகின்றன. இச்செய்திகள் குறித்து உடனுக்குடன் அத்துறையின் செயலாளர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு, அவர்தம் கைப்பேசிகளுக்குக் குறுஞ்செய்திகளாகவும் அனுப்பப்படுகின்றன. மேலும், அரசு செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் ஆகியோருக்கு இக்குறுஞ்செய்திகளை, ‘கட்செவி’ (WhatsApp) மற்றும் மின்னஞ்சல்கள் மூலம் அனுப்பிடும் சிறப்புப் பணியையும் இப்பிரிவு நாள்தோறும் மேற்கொள்கிறது.

தமிழ் மற்றும் ஆங்கில முக்கிய நாளிதழ்கள் முறையாகத் தொகுக்கப்பட்டு, பைண்டிங் செய்யப்பட்டு, எதிர்காலத் தேவைக்கென இப்பிரிவில் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவை சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் காலங்களிலும், தேவைக்கேற்பவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள், துறைச்செயலாளர்கள் உள்ளிட்ட துறை அலுவலர்கள் ஆகியோரால் கேட்கப்படும்போது உடன் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக் கிணங்க, காலச்சுவடுகளின் தொகுப்பாக விளங்கும் பழைய நாளிதழ்கள், நவீன மின்னணு முறையில் எண்மம் (Digital) செய்யப்படுகின்றன. மேற்கோள் பிரிவில் பராமரிக்கப்படும் நாளிதழ்களின் முக்கியச் செய்திகள், மாண்புமிகு தமிழ்நாடு

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், செய்தியாளர்கள் சந்திப்பு, அரசின் சாதனைகள், வழங்கப்படும் அரசு நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட அனைத்துச் செய்தி நறுக்குகளும், நாளிதழ்களின் தலையங்கங்கள், கட்டுரைகள், விமர்சனங்கள் மற்றும் பல்வேறு தலைவர்களின் கருத்துக்கள் போன்றவையும் தனித்தனித் தலைப்புகளில் தொகுக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன.

## நினைவகங்கள்

தமிழ்நாட்டுக்குப் பெருமையினைத் தேடித்தந்த பெருமக்கள் மற்றும் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுத் தம் வாழ்வையே அர்ப்பணித்த தமிழ்ச் சான்றோர்கள் ஆகியோரது நினைவுகளைப் போற்றியும், இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று, தன்னுயிரினைத் தந்து, தியாகங்கள் பல புரிந்து, தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சிகளாக விளங்கும் தியாகிகளைப் பெருமைப்படுத்துகின்ற வகையிலும், செய்தி மக்கள் தொடர்புத்துறையால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், 68 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள், ஒரு நினைவுச்சின்னம் ஆகியன உருவாக்கப்பட்டு, இன்றைய தலைமுறையினரும் அறிந்து பயனடையும் வகையில், சிறந்த முறையில் பராமரிக்கப்படுவதோடு பாதுகாக்கப்பட்டும் வருகின்றன.

### அ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட மணிமண்டபங்கள் / நினைவு மண்டபங்கள் / பூங்கா

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில், ஒரு கோடியே **41** இலட்சம் ரூபாய்ச் செலவில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள, சுவாமி சகஜானந்தா மணிமண்டபம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் **02.02.2018** அன்று பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ரூ.**2.62** கோடி செலவில், பேரறிஞர் அண்ணா நினைவிட வளாகத்திற்குள்ளாக **3** ஏக்கர் பரப்பளவிலான இடத்தினை மேம்படுத்தி, இயற்கை எழில் கொஞ்சும் வகையில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், கடந்த **23.05.2017** அன்று பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டம், திருவாரூர் நகரத்தில், ஒரு கோடியே **10** இலட்சம் ரூபாய்ச் செலவில், மனுநீதிச்சோழன் நினைவு மண்டபம் அமைக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், கடந்த **07.03.2017** அன்று பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் அடியனூத்து கிராமத்தில், ஒரு கோடியே **30** இலட்சம் ரூபாய்ச் செலவில், புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் மணிமண்டபம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், கடந்த **31.12.2017** அன்று பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஆவுடையான் குளத்தில், **85** இலட்சம் ரூபாய்ச் செலவில், கட்டப்பட்டுள்ள பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவு மண்டபம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த **29.11.2017** அன்று பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

**2** கோடியே **80** இலட்சம் ரூபாய்ச் செலவில், சென்னை அடையாறில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நடிகர் திலகம் சிவாஜிகணேசன் மணிமண்டபம், மாண்புமிகு துணை

முதலமைச்சர் அவர்களால், கடந்த **01.10.2017** அன்று பொதுமக்களின் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## ஆ) நினைவகங்கள்

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 2 | பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் (ம) புரட்சித்தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவிடம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 3 | பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 4 | பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 5 | காந்தி மண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 6 | மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 7 | மகாகவி பாரதியார் நினைவு இல்லம் | துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை |
| 8 | பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம் | திருமலை சாலை, தியாகராயநகர், சென்னை |
| 9 | வள்ளுவர் கோட்டம் | நுங்கம்பாக்கம், சென்னை |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 10 | மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 11 | தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 12 | இரட்டைமலை சீனிவாசன் நினைவகம் | சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 13 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபம் | டாம்ஸ் சாலை, சென்னை |
| 14 | சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் மணிமண்டபம் | இராயபுரம், சென்னை |
| 15 | நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபம் | அடையாறு, சென்னை |
| 16 | பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் | சின்னக் காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 17 | திருப்பூர் குமரன் நினைவகம் | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 18 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம் | உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் |
| 19 | தந்தை பெரியார் நினைவகம் | வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம் |
| 20 | பெரியார்–அண்ணா நினைவகம் | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 21 | தீரன் சின்னமலை மணிமண்டபம் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 22 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம் | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 23 | வள்ளல் அதியமான் கோட்டம் | தருமபுரி, தருமபுரி மாவட்டம் |
| 24 | தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 25 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம் | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 26 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் நினைவு இல்லம் | வரகனேரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 27 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம் | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 28 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி மணிமண்டபம் | ஆவுடையான்குளம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 29 | தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் | தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 30 | தமிழிசை மூவர் மணிமண்டபம் | சீர்காழி, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 31 | தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம் | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 32 | தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம் | திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 33 | மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம் | திருவாரூர், திருவாரூர் மாவட்டம் |
| 34 | கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 35 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 36 | மருதுபாண்டியர் நினைவு மண்டபம் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 37 | வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 38 | தியாக சீலர் கக்கன் மணிமண்டபம் | தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 39 | தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம் | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 40 | பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம் | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 41 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம் | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 42 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 43 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 44 | தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 45 | மகாகவி பாரதியார் மணிமண்டபம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 46 | மகாகவி பாரதியார் இல்லம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 47 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இல்லம் | ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 48 | வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 49 | சுதந்திரப்போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம் | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 50 | சுதந்திரப்போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம் | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம் |
| 51 | அமுதகவி உமறுப்புலவர் நினைவகம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 52 | வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம் | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |
| 53 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம் | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 54 | பூலித்தேவன் நினைவு மாளிகை | நெற்கட்டும்செவல், திருநெல்வேலி மாவட்டம் |
| 55 | தமிழறிஞர் கால்டுவெல் நினைவு இல்லம் | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 56 | தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம் | செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 57 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் மணிமண்டபம் | பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 58 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 59 | காந்தி நினைவு மண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 60 | பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 61 | சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம் | இடலாக்குடி, கோட்டாறு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 62 | மார்ஷல் நேசமணி மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 63 | முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரம ராஜ சிங்கன் நினைவகம்) | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 64 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் மணிமண்டபம் | விருப்பாட்சி, திண்டுக்கல் மாவட்டம் |
| 65 | மாமன்னர்கள் ஹைதர் அலி, திப்பு சுல்தான் மணிமண்டபம் | அடியனூத்து கிராமம், திண்டுக்கல் மாவட்டம் |
| 66 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம் | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |
| 67 | விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை நினைவுச் சின்னம் | சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 68 | சுவாமி சகஜானந்தா மணி மண்டபம் | சிதம்பரம், கடலூர் மாவட்டம் |

## இ) அரங்கங்கள்

| வ. எண் | அரங்கம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | இராஜாஜி மண்டபம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 2 | கலைவாணர் அரங்கம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 3 | அண்ணா கலை அரங்கம் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 4 | மகாமகம் பல்நோக்கு கலை அரங்கம் | கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் |

## ஈ) நினைவுத் தூண்கள்

| வ. எண் | நினைவுத் தூண் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | "வெள்ளையனே வெளியேறு" இயக்கப் பொன்விழா நினைவுத் தூண் | காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 2 | சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண் | போர் நினைவுச் சின்னம் அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 3 | குடியரசு பொன்விழா நினைவுத் தூண் | காந்தி சிலை அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 4 | சிப்பாய்ப் புரட்சி நினைவுத் தூண் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 5 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா நினைவுத் தூண் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |

**உ) நினைவுச் சின்னம்**

| வ. எண் | நினைவுச் சின்னம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | வீரத்தாய் குயிலி நினைவுச் சின்னம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |

**ஊ) புதியதாக அமைக்கப்பட்டுள்ள மணிமண்டபம் / நினைவு மண்டபம் / அரங்கம் / நினைவுச்சின்னம்.**

கடந்த **2011** ஆம் ஆண்டு முதல் **2016**ஆம் ஆண்டு வரையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், **73.43** கோடி ரூபாய்ச் செலவில், பல்வேறு மாவட்டங்களில் பொது மக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ள நினைவு மண்டபம், அரங்கம், நினைவுச் சின்னங்களின் விவரம் பின்வருமாறு:

தியாகி சுப்பரமணிய சிவா மணிமண்டபம், தருமபுரி மாவட்டம், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் மணிமண்டபம் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் மணிமண்டபம், இராயபுரம், சென்னை மாவட்டம், தீரன் சின்னமலை நினைவுச் சின்னம், சங்ககிரி, சேலம் மாவட்டம், தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம், விருதுநகர் மாவட்டம், வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம், வீரத்தாய் குயிலி நினைவுச் சின்னம், சிவகங்கை மாவட்டம், வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம், கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம், விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர்

மணிமண்டபம், திண்டுக்கல் மாவட்டம், தமிழிசை மூவர் மணிமண்டபம், சீர்காழி, நாகப்பட்டினம் மாவட்டம், மார்ஷல் நேசமணி மணிமண்டபம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம், விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவு மண்டபம், பாளையங்கோட்டை மற்றும் தியாகி வாஞ்சிநாதன் மணி மண்டபம், செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம், ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் மணிமண்டபம், ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம், கலைவாணர் அரங்கம், சென்னை மாவட்டம்.

## எ) புனரமைக்கப்பட்டுள்ள மண்டபங்கள் மற்றும் நினைவிடங்கள்

கடந்த 2011ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், 23 கோடியே 50 இலட்சம் ரூபாய்ச் செலவில், 10 நினைவிடங்கள், மண்டபங்கள் மற்றும் கலையரங்கம் ஆகியன புனரமைக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:

சென்னையில், பேறறிஞர் அண்ணா மற்றும் பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடங்கள், மகாகவி பாரதியார் நினைவில்லம், காந்தி மண்டப வளாகம், இராஜாஜி மண்டபம், பெருந்தலைவர் காமராஜர் நினைவில்லம் மற்றும் மணி மண்டபம், கன்னியாகுமரி மாவட்டம், காஞ்சிபுரம் பேறறிஞர் அண்ணா நினைவில்லம், வைக்கம் தந்தை பெரியார் நினைவகம், தஞ்சாவூர் மகாமகம் பல்நோக்கு கலையரங்கம்.

**ஏ) கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் / தொடங்கப்படும் நிலையில் உள்ள மணிமண்டபங்கள்**

| வ. எண் | மணிமண்டபம் / கலையரங்கம் | மதிப்பீடு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவு மண்டபம் | ரூபாய் 50 கோடியே 80 இலட்சம் | மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2 | மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா வாழ்ந்த சென்னை போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள "வேதா நிலையம்" இல்லத்தை அரசு நினைவிடமாக மாற்றுதல் | ரூபாய் 20 கோடி | "வேதா நிலையம்" இல்லம் அமைந்துள்ள நிலத்தினைக் கையகப்படுத்தச் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
| 3 | உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு மணிமண்டபம், கோயம்புத்தூர் மாவட்டம் | ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் | கட்டுமானப் பணிகள் பொதுப்பணித் துறையால் தொடங்கப்பட்டுள்ளன. |
| 4 | டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம். | ரூபாய் 1 கோடியே 34 இலட்சம் | மணிமண்டபம் அமைத்திடத் தகுந்த இடம் தேர்வு செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

# அரசு விழாக்கள்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே, வாளோடு முன்தோன்றிய, மூத்தகுடி தமிழ்க்குடி. உலகிலுள்ள மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாய் விளங்கிடும் நம் தமிழ் மொழிக்கு அருந்தொண்டாற்றிய ஆன்றோர்களையும், தமிழ்ச் சான்றோர்களையும், தமிழகத்தின் முன்னேற்றத்திற்குப் பெருந்தொண்டாற்றிய முதுபெருந் தலைவர்களையும், பெரியோர்களையும், இந்தியத் திருநாட்டின் விடுதலைக்குத் தங்களையே அர்ப்பணித்த தியாக சீலர்களையும் நினைவு கூர்ந்து, அப்பெருமகனார்களை, தமிழக அரசின் சார்பில் பெருமைப்படுத்திடும் உயரிய பணிகளைச் செய்தி மக்கள் தொடர்புத்துறை செம்மையாகச் செய்து வருகிறது.

அந்த வகையில், அவர்கள் ஆற்றிய அரும்பணிகளை தன்னலமற்ற தொண்டுகளை இன்றைய இளைய தலைமுறையினர் அவசியம் அறிந்துகொள்வதோடு, அவர்களின் நல்ல கொள்கைகளைப் பின்பற்றித் தாங்களும் நல்வழி செல்வதோடு நம் நாட்டினை நன்நிலைக்குயர்த்திட முன்வர வேண்டும் என்கிற உயரிய நோக்கில், தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், அன்னாரின் நினைவு நாள்கள் அனுசரிக்கப்பட்டும் பிறந்த நாள் விழாக்கள் அந்தந்த மாவட்டங்களில் வெகு விமரிசையாக அரசின் சார்பில் கொண்டாடப்பட்டும் வருகின்றன.

வாழும்போதே வரலாறாகிவிட்ட உன்னதத் தலைவர்களின் சீர்மிகு விழாக்களில், மாண்புமிகு ஆளுநர்

அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் பங்கேற்று, அரசின் சார்பில் அன்னாரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலைகள் அணிவித்தும், திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும் மரியாதை செலுத்துகின்றனர்.

சென்னை மாவட்டத்தில் 27 தலைவர்களுக்கும், பிற மாவட்டங்களில் 63 தலைவர்களுக்கும் அவர்களின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாள்களில், திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்திடும் பணி செவ்வனே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## அ) சென்னையில் நடத்தப்படும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 1 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா |
| 2 | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் விழா |
| 3 | ஜனவரி 30 | அண்ணல் காந்தியடிகள் நினைவு நாள் |
| 4 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பிறந்த நாள் விழா |
| 5 | ஏப்ரல் 14 | டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த நாள் விழா |
| 6 | ஏப்ரல் 17 | சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 7 | ஏப்ரல் 27 | சர்.பிட்டி.தியாகராயர் பிறந்த நாள் விழா |
| 8 | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா |
| 9 | ஏப்ரல் 29 | சித்திரை முழு நிலவு நாளன்று கண்ணகி சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் திருவுருவப் படத்திற்கு மலர் அலங்காரம் செய்து மலர்தூவி மரியாதை செய்தல் |
| 10 | ஜூன் 5 | கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் பிறந்த நாள் விழா |
| 11 | ஜூன் 24 | கவியரசு கண்ணதாசன் பிறந்த நாள் விழா |
| 12 | ஜூலை 7 | இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள் விழா |
| 13 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா |
| 14 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் |
| 15 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி சங்கரலிங்கனார் |
| 16 | ஜூலை 17 | தியாகிகள் தினம், தியாகி செண்பகராமன் |

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 17 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா |
| 18 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |
| 19 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா |
| 20 | செப்டம்பர் 29 | முன்னாள் சென்னை மேயர் சிவராஜ் பிறந்த நாள் விழா |
| 21 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா |
| 22 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா |
| 23 | நவம்பர் 8 | தமிழறிஞர் வீரமாமுனிவர் பிறந்த நாள் விழா |
| 24 | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் விழா |
| 25 | நவம்பர் 23 | கவிஞர் சுரதா பிறந்த நாள் விழா |
| 26 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா |
| 27 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா |

## ஆ) மாவட்டங்களில் நடத்தப்படும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 1 | ஜனவரி 3 | வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்த நாள் விழா | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 2 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா | காமராஜர் சாலை, சென்னை |
| 3 | ஜனவரி 26 | தியாகி சங்கரலிங்கனார் பிறந்த நாள் விழா | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 4 | பிப்ரவரி 1 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் பிறந்த நாள் விழா | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |
| 5 | பிப்ரவரி 7 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பிறந்த நாள் விழா | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 6 | பிப்ரவரி 9 (தைப்பூசத் திருநாள்) | திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழா | மதுரை, மதுரை மாவட்டம் |
| 7 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்த நாள் விழா | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 8 | பிப்ரவரி 19 | தமிழ்த் தாத்தா உ.வே.சா. பிறந்த நாள் விழா | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 9 | பிப்ரவரி 22 | தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாள் விழா | தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 10 | மார்ச் 30 | ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள் விழா | இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 11 | ஏப்ரல் 2 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் பிறந்த நாள் விழா | வரகனேரி, திருச்சி மாநகர், திருச்சி மாவட்டம் |
| 12 | ஏப்ரல் 10 | தியாகி பி. சீனிவாசராவ் பிறந்த நாள் விழா | திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் |
| 13 | ஏப்ரல் 13 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த நாள் விழா | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 14 | ஏப்ரல் 16 | வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 15 | ஏப்ரல் 17 | தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம். |
| 16 | சித்ரா பௌர்ணமி ஏப்ரல் 30 | வள்ளல் அதியமான் பிறந்த நாள் விழா | அதியமான் கோட்டை, தருமபுரி மாவட்டம் |
| 17 | மே 7 | இராபர்ட் கால்டுவெல் பிறந்த நாள் விழா | இடையன்குளம், திருநெல்வேலி மாவட்டம் |
| 18 | மே 11 (சித்திரை இறுதி வெள்ளி) | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | கயத்தாறு மற்றும் பாஞ்சாலங்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 19 | மே 23 | பெரும்பிடுகு முத்தரையர் பிறந்த நாள் விழா | திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 20 | ஜூன் 12 | மார்ஷல் நேசமணி பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 21 | ஜூன் 16 | தியாகி விஸ்வநாததாஸ் பிறந்த நாள் விழா | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 22 | ஜூன் 18 | தியாக சீலர் கக்கன் பிறந்த நாள் விழா | மேலூர் அருகில், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 23 | ஜூன் 24 | கவிஞர் கண்ணதாசன் பிறந்த நாள் விழா | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 24 | ஜூலை 6 | தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் பிறந்த நாள்விழா | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 25 | ஜூலை 11 | வீரன் அழகுமுத்துக்கோன் பிறந்த நாள் விழா | கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம் |
| 26 | ஜூலை 11 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் பிறந்த நாள் விழா | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 27 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள்விழா | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 28 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள்விழா | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 29 | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள்விழா | திருமலை சாலை, தியாகராயர் நகர், சென்னை மாவட்டம் |
| 30 | ஜூலை 17 | தியாகி வாஞ்சிநாதன், தியாகிகள் தினம் | செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 31 | ஜூலை 31 | சதாவதானி செய்குதம்பி பாவலர் பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 32 | ஆகஸ்ட் 2 மற்றும் 3 | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் |
| 33 | ஆகஸ்ட் 3 (ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 34 | ஆகஸ்ட் 3 (ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 35 | ஆகஸ்ட் 21 | பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 36 | செப்டம்பர் 1 (ஆவணி 16) | விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்த நாள் விழா | நெற்கட்டும் செவல், திருநெல்வேலி மாவட்டம் |
| 37 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 38 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 39 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | அண்ணா சதுக்கம், சென்னை மாவட்டம் |
| 40 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 41 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 42 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 43 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | வைக்கம், கேரளா மாநிலம் |
| 44 | செப்டம்பர் 25 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி பிறந்த நாள் விழா | உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் |
| 45 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 46 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | அனைத்து மாவட்டங்கள் |
| 47 | அக்டோபர் 4 | தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த நாள் விழா | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 48 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 49 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | சென்னிமலை, ஈரோடு மாவட்டம் |
| 50 | அக்டோபர் 9 | பெரியவர் எம்.பக்தவத்சலம் பிறந்த நாள் விழா | காந்தி மண்டபம், சென்னை மாவட்டம் |
| 51 | அக்டோபர் 10 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை பிறந்த நாள் விழா | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 52 | அக்டோபர் 23 | அமுத கவி உமறுப்புலவர் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 53 | அக்டோபர் 24 | மருதுபாண்டியர் நினைவு நாள் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 54 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா | பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம் |
| 55 | நவம்பர் 1 | கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழ்நாட்டுடன் இணைந்த நாளை முன்னிட்டு மார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 56 | நவம்பர் 11 | சுயமரியாதைச் சுடரொளி என். ஜீவரத்தினம் பிறந்த நாள் விழா | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 57 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 58 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 59 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | திருவல்லிக்கேணி, சென்னை மாவட்டம் |
| 60 | டிசம்பர் 15 | அதங்கோட்டாசான் பிறந்த நாள் விழா | அதங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம் |
| 61 | மே 31 | சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத்தேவன் நினைவு நாள் | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம் |
| 62 | ஆகஸ்ட் 20 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் நினைவு நாள் | பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |

## இ) 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையிலான கடந்த ஐந்தாண்டுகளில் மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டுக் கொண்டாடப்படும் விழாக்கள்

கன்னியாகுமரி மாவட்டம் தமிழகத்துடன் இணைய அரும்பாடுபட்ட மார்ஷல் நேசமணி அவர்களின் பெருமையைப் போற்றும் வகையில், தமிழ்நாட்டுடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைந்த நாளான நவம்பர் 1–ஆம் நாள் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்த தலைவர் இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாள் விழா ஆண்டுதோறும் ஜூலை திங்கள் 7–ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் விடுதலைப் போராட்ட வீராங்கனை வீரமங்கை வேலுநாச்சியாரின் பிறந்தநாள் விழா ஆண்டுதோறும் ஜனவரி திங்கள் 3–ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் மிகவும் முக்கியமான மன்னரான திருமலை நாயக்கர் அவர்களின் பிறந்த நாள் விழா ஆண்டுதோறும் தைப்பூசத்தன்று மதுரையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

கொடிகாத்த குமரன் அவர்களின் பிறந்த நாள் விழா ஆண்டுதோறும் அக்டோபர் திங்கள் 4–ஆம் நாள் திருப்பூரில் கொண்டாடப்பட்டு வருகிறது.

விடுதலைப் போராட்ட வீரர் தியாகி வாஞ்சிநாதன் அவர்களின் பிறந்த நாள் விழா தியாகிகள் தினமான ஜுலை திங்கள் 17–ஆம் நாள் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

**ஈ) கடந்த ஓராண்டில் (2017–2018) மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் அறிவிக்கப்பட்டுக் கொண்டாடப்படும் விழாக்கள்**

திருப்பூர் குமரன் பிறந்த இடமான சென்னிமலையில் கொடிகாத்த குமரன் பிறந்த நாள் விழா அக்டோபர் திங்கள் 4–ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டம் நெற்கட்டும் செவலில், விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்தநாள் விழா செப்டம்பர் 1 (ஆவணி 16) ஆம் நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

**உ) பின்வரும் 30 சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் திருவுருவச்சிலைக்கு, மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் உத்தரவின்படி, 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்ச் செலவில், ஆண்டுதோறும் அரசு சார்பில், மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அரசு விழாவாகக் கொண்டாட வழிவகை செய்யப்பட்டுள்ளது.**

| வ. எண் | திருவுருவச்சிலை மற்றும் நினைவிடம் |
|---|---|
| 1. | தந்தை பெரியார், வைக்கம் கேரள மாநிலம் |
| 2. | பேரறிஞர் அண்ணா, சென்னை மாவட்டம் |
| 3. | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். சென்னை மாவட்டம் |
| 4. | பெருந்தலைவர் காமராஜர், சென்னை மாவட்டம் |
| 5. | மகாகவி பாரதியார், சென்னை மாவட்டம் |
| 6. | சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர், சென்னை மாவட்டம் |
| 7. | சுயமரியாதைச் சுடரொளி என்.ஜீவரத்தினம், சென்னை மாவட்டம் |
| 8. | பெரியவர் எம்.பக்தவத்சலம், சென்னை மாவட்டம் |
| 9. | பேரறிஞர் அண்ணா, காஞ்சிபுரம் மாவட்டம் |
| 10. | அண்ணல் காந்தியடிகள், கன்னியாகுமரி மாவட்டம் |
| 11. | பெருந்தலைவர் காமராஜர் (கன்னியாகுமரி) |
| 12. | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர், திண்டுக்கல் மாவட்டம் |
| 13. | வள்ளல் அதியமான், தருமபுரி மாவட்டம் |
| 14. | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 15. | தில்லையாடி வள்ளியம்மை , நாகபட்டினம் மாவட்டம் |
| 16. | வீரபாண்டிய கட்டபொம்மன் , தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | திருவுருவச்சிலை மற்றும் நினைவிடம் |
|---|---|
| 17. | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை, நாமக்கல் மாவட்டம் |
| 18. | கவிஞர் கண்ணதாசன், சிவகங்கை மாவட்டம் |
| 19. | தவத்திரு குன்றக்குடி அடிகளார், சிவகங்கை மாவட்டம் |
| 20. | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், தஞ்சாவூர் மாவட்டம் |
| 21. | இராபர்ட் கால்டுவெல், திருநெல்வேலி மாவட்டம் |
| 22. | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், விழுப்புரம் மாவட்டம் |
| 23. | தியாகி பி.சீனிவாசராவ், திருவாரூர் மாவட்டம் |
| 24. | சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன், தூத்துக்குடி மாவட்டம் |
| 25. | அமுத கவி உமறுப்புலவர், தூத்துக்குடி மாவட்டம் |
| 26. | வ.வே.சுப்பிரமணிய அய்யர், திருச்சி மாவட்டம் |
| 27. | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன், திருநெல்வேலி மாவட்டம் |
| 28. | பெருந்தலைவர் காமராஜர், விருதுநகர் மாவட்டம் |
| 29. | தியாகி சங்கரலிங்கனார், விருதுநகர் மாவட்டம் |
| 30. | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி, திருப்பூர் மாவட்டம் |

**ஊ) பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா**

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா தமிழ்நாடு அரசின் சார்பில், ஆண்டு முழுவதும் கொண்டாடப்படும் என்று மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி

அம்மா அவர்கள் அறிவித்து இருந்தார்கள். புரட்சித்தலைவி அம்மா அவர்களின் எண்ணத்தினை ஈடேற்றிடும் வகையில், தமிழ்நாட்டில் இதுவரையில் எந்தத் தலைவருக்கும் இல்லாத வகையில், பாரதரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு மிகப் பிரமாண்டமான அளவில் விழா நடத்தப்பட்டு, சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் மிகச்சிறந்த முறையில் தமிழ்நாடு முழுவதும் கொண்டாட, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களைத் தலைவராகவும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை உறுப்பினர்களாகவும் உள்ளடக்கிய உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவின் பரிந்துரையின்படி பாரதரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா சிறப்பாகச் கொண்டாடப்பட்டது.

கடந்த **30.06.2017**அன்று மதுரை மாநகரில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பாரதரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டமானது, வெகு சீரோடும் சிறப்போடும் தொடங்கி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும், கடந்த **31.12.2017** அன்று வரை **30** மாவட்டங்களிலும் மிகுந்த எழுச்சியுடனும், பொதுமக்கள் பெரிதும் பாராட்டிப் பயனடையும் வகையிலும் சிறப்புடன் கொண்டாடப்பட்டுள்ளது.

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை விளக்கிடும் வண்ணம், நூற்றாண்டு விழா மலர், குறும்படம், சட்டமன்றம் மற்றும் பொது நிகழ்வுகளில் அவர் ஆற்றியுள்ள உரைகளின் தொகுப்புகள், முக்கிய நிகழ்வுகளின் புகைப்படத் தொகுப்புகள் அடங்கிய புத்தகங்கள் ஆகியவற்றினை உருவாக்கிட, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு செய்தி விளம்பரத்துறை அமைச்சர், திரைத்துறையினர், பத்திரிகையாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழு ஒன்றும் அமைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்றன.

பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் புகழ் என்றென்றும் நிலைத்திடும் வகையிலும் அவரது பெருமையைப் பொதுமக்கள் அறியும் வகையிலும் கொண்டாடப்பட்ட இந்த நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சிகள் மற்றும் பேரணிகள் நடத்தப்பட்டதோடு பள்ளி, கல்லூரிகளில் விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், கவிதைப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் ஆகியன நடத்தப்பட்டு, வெற்றி பெற்றோருக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டதுடன், நலிந்த மக்களுக்கு நலத்திட்ட உதவிகளும் மாவட்டங்களில் நடைபெற்ற டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக்களில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரால் வழங்கப்பட்டன.

மேலும், பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெற்ற 30 மாவட்டங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகள் புத்தக வடிவில் தயாரித்து வெளியிடும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

30 மாவட்டங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பங்கேற்று, மிகச் சிறப்பாக நடத்தப்பட்டுள்ள பாரதரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில், மொத்தம் 5 ஆயிரத்து 712 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 3,200 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன.

5 ஆயிரத்து 127 கோடியே 11 இலட்சம் ரூபாய்ச் செலவில், முடிவுற்ற 2,329 திட்டப் பணிகள் திறந்து வைக்கப்பட்டும் உள்ளன. மேலும், 5 ஆயிரத்து 397 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 8,11,481 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. அதோடு மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில், 521 புதிய அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

### எ) அரசு சார்பில் கொண்டாடப்படும் சிறப்பு விழா

'வள்ளுவன் தன்னை உலகிற்குத் தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்ற மகாகவி பாரதியின் வாக்குக்கேற்ப, திருவள்ளுவர் பிறந்த தினமான தைத் திங்களில், ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று, தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் செய்தித்துறை இணைந்து

திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழா மிகச் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

இவ்விழாவில், தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ள அறிஞர் பெருமக்களுக்குத் 'திருவள்ளுவர் விருது', 'தந்தை பெரியார் விருது', 'பேரறிஞர் அண்ணா விருது', 'அண்ணல் அம்பேத்கர் விருது', 'பெருந்தலைவர் காமராஜர் விருது', 'மகாகவி பாரதியார் விருது', 'பாவேந்தர் பாரதிதாசன் விருது', 'தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது' மற்றும் 'கி.ஆ.பெ. விசுவநாதம் விருது' உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டு, பெருமைப்படுத்தப்படுகின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் "ஓராண்டுச் சாதனை விழா" 23.03.2018 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை விளக்கிடும் வகையில் 27 துறைகள் பங்கேற்ற கண்காட்சி 23.03.2018 முதல் 30.03.2018 வரை நடைபெற்றது.

## கள விளம்பரம்

தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள் வாயிலாகச் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்களையும், சாதனைகளையும் தமிழகத்தின் குக்கிராமங்களில் உள்ள அடித்தள மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும், அம்மக்கள் அடைந்துள்ள பயன்களை ஆவணப்படுத்திடும் உயரிய நோக்கிலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணையின் பெயரில், கடந்த **2013**ஆம் ஆண்டு முதன் முறையாகக் '**கள விளம்பரப் பிரிவு**' (Field Publicity wing) எனும் புதிய பிரிவு செய்தி மக்கள் தொடர்புத் துறையில் உருவாக்கப்பட்டு, சிறந்த முறையில் களப்பணியாற்றி வருகிறது.

### அ) மின்னணு விளம்பரத் திரை வீடியோ வாகனம்

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், அதிநவீனத் தொழில்நுட்பத்துடன், 'புவிதிசைச்சுட்டி' (GPS)யுடன்கூடிய,மிகப்பிரமாண்டமான அகண்ட திரையுடனும், நான்கு புறமும் சுழலும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ள 'மின்னணு விளம்பரத்திரை' (LED Screen) பொருத்தப்பட்டுள்ள **32** புதிய மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனங்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனங்கள், பகல், இரவு உட்பட அனைத்து நேரங்களிலும் மக்கள் கூடும் இடங்களிலும் அரசு விழாக்கள் நடைபெறும் இடங்களிலும் அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்த விளம்பரப்

பணிகளை மேற்கொள்ளும் வகையில், நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த விளம்பரக் காட்சி ஊர்திகளின் அன்றாட நடமாட்டத்தினையும், குக்கிராமம், கிராம ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி உள்ளிட்ட எந்தப் பகுதியில் மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனம் வாயிலாக விளம்பரப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் ‘புவிதிசைச்சுட்டி’ (GPS) வாயிலாக, கண்காணிக்கும் பணிகளும், இக்கள விளம்பரப் பிரிவு வாயிலாகத் திறம்பட மேற்கொள்ளப்படுகின்றன.

## ஆ) மின்னணு விளம்பரத் திரைகள்

பொது மக்கள் அதிக அளவில் வந்து சென்றிடும் இடங்களில், அரசின் திட்டங்கள், சாதனைகள் மற்றும் முக்கிய விழாக்கள் தொடர்பான விவரங்களைக் கண்டு பயனடைந்திடும் தொலை நோக்கில், மாநிலத்திலுள்ள 32 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மேலும் சென்னையில் உள்ள 10 அம்மா உணவகங்கள், 3 வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் புதுடில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் அகண்ட திரையளவுள்ள ‘மின்னணுத் தொலைக்காட்சி’ (LED TV) நிறுவப்பட்டு, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள அரசின் சாதனை மலர்த் தொகுப்பு ஒளிப்படங்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டு, களவிளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## இ) அலுவலர்களின் பணி மதிப்பீடு

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகளான, செய்தியாளர் கூட்டங்கள் நடத்துதல், செய்தியாளர் பயணங்கள் ஏற்பாடு செய்தல், நாளிதழ்களில் வெற்றிக் கதைகள் வெளிவரச் செய்தல், வீடியோ படக்காட்சிகள் நடத்துதல், திரையரங்குகளில் அரசின் செய்தி மலர் ஒளிபரப்பினை ஆய்வு செய்தல், சிறப்பு வெளியீடுகள் பிரசுரித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மாதந்தோறும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

ஒவ்வொரு பணிக்கும் தனித்தனி மதிப்பெண்கள் வழங்கப்பட்டு, அவர்களின் பணிகளை மாதந்தோறும், தலைமையிட உயர்மட்ட அலுவலர்களைக் கொண்ட தனிக் குழுவினரால் தரமதிப்பீடு செய்வதன் பயனாக, மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகளில் உள்ள சுணக்கம் உடனடியாகக் களையப்பட்டு, மாவட்டங்களில் அவர்தம் பணிகளைத் திறம்பட மேற்கொள்ளவும், ஏனைய பிற மாவட்டங்களோடு ஒப்பீடு செய்து, நிருணயிக்கப்பட்டுள்ள இலக்கினை எளிமையாக எய்தி, புதிய வேகத்தோடு பணியாற்றிடவும் வழிவகுத்து உள்ளது என்றால் அது மிகையில்லை.

## ஈ) புத்தாக்கப் பயிற்சி

ஆண்டுதோறும் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் மாவட்டங்களில் பணியாற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி

மற்றும் விளம்பரம்) ஆகியோருக்குப் புத்தாக்கப்பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த ஆண்டு சென்னை, கலைவாணர் அரங்கில் 12.03.2018 முதல் 14.03.2018 வரை புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

தேர்ந்த அனுபவம் கொண்ட அலுவலர்கள், நெறியாளர் மற்றும் மனவளக்கலை நிபுணர், ஆகியோரின் வாயிலாக, அரசுப் பணியில் புதிய நடைமுறைகள், பணித்திறனை மேம்படுத்திடப் புதிய உத்திகள், நல் ஆளுமைப் பயிற்சி, தகவல் அறியும் உரிமைச் சட்டம், ஒழுங்கு நடவடிக்கைகள், நீதிமன்ற வழக்குகளைக் கையாளுதல், சமூக ஊடகங்களில் செய்தித்துறையின் பணிகள் உள்ளிட்டவை இப்புத்தாக்கப் பயிற்சியில் பயிற்றுவிக்கப்பட்டன.

# விளம்பரம்

தமிழ்நாடு அரசின் சாதனைகள், திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சமூகநலப் பணிகளை மக்கள் முழுமையாக அறிந்து பயன்பெறும் வகையில் நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள் ஆகியவற்றில் அரசால் நிருணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தில் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் ஏனைய பணிகள் குறித்து வெளியிடப்படும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களையும் இப்பிரிவு வெளியிட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் விளம்பரங்களை, நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடும் மையமாகவும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் விளம்பரப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

## அ) ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள்

நவீன மின்னணுத் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, கூடுதல் செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில், ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் தேசியத் தகவல் மையத்தின் வழியாக (NIC) தமிழக அரசின் **www.tn.gov.in** என்ற இணையதளம் மற்றும் **www.tenders.tn.gov.in** என்ற இணையத்தளத்திலும் வெளியிடப்படுகின்றன. தேவைப்படுவோர் ஒப்பந்தப்புள்ளிப் படிவங்களை விலையேதுமின்றிப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் அரசு நிருணயித்துள்ள கட்டணங்களில், விளம்பரங்களாக பத்திரிகைகளிலும் இலவசமாக இணையத்தளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பயனாக, தகுதியான அனைவரும், தமிழக அரசு கோரும் ஒப்பந்தப்புள்ளிகளில், பாகுபாடு இன்றிப் பங்கேற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**ஆ) ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள்**

பொதுமக்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில், அரசின் செயல்பாடுகள் அனைத்தும் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் இயற்றப்பட்டு, அவற்றின் அடிப்படையில் மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன.

10 இலட்சம் ரூபாய்க்கு மேல் 25 இலட்சம் ரூபாய் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் 25 இலட்சம் ரூபாய்க்கு மேல் 50 இலட்சம் ரூபாய் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியவை குறித்த ஒப்பந்தப்புள்ளிகள், மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், 25 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் 50 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகியவை குறித்த ஒப்பந்தப்புள்ளிகள், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் வெளியிடப்படுகின்றன.

இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

# திரைப்பட விருதுகள், மானியம் மற்றும் சின்னத்திரை விருதுகள்

## அ) திரைப்பட விருதுகள்

திரைப்படங்கள் அனைத்துத் தரப்பினரையும் வெகு எளிதில் சென்றடைந்திடும் ஒரு வலிமை வாய்ந்த சாதனம் ஆகும். தமிழ்நாடு அரசு சார்பில், சமுதாயச் சிந்தனைகளுடன் கூடிய சிறந்த கலைப்படைப்புகளையும், மனித நல்லுணர்வுகளையும் வெளிப்படுத்தும் தரமான திரைப்படங்களையும் தயாரித்திட ஊக்கப்படுத்திடும் வகையில், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய விருதுகளைப் பெற்றிடத் தகுதி வாய்ந்தோரைத் தேர்வு செய்திடும் பொருட்டு, தமிழக அரசால் தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினரால் தேர்வு செய்யப்பட்டுப் பரிந்துரைக்கும் சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசாக 2 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 1 இலட்சம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், சிறப்புப் பரிசாக 75 ஆயிரம் ரூபாய் ரொக்கமும் வழங்கப்படுவதோடு, நினைவுப்பரிசுகள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், பெண்களை வெகு உயர்வாகச் சித்திரிக்கும் திரைப்படத்திற்குச் சிறப்புப் பரிசாக 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த நடிகர் (சிறப்புப்பரிசு), சிறந்த நடிகை (சிறப்புப்பரிசு), சிறந்த வில்லன் நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகை, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த இயக்குநர், சிறந்த கதை ஆசிரியர், சிறந்த உரையாடலாசிரியர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடலாசிரியர், சிறந்த பின்னணிப் பாடகர், சிறந்த பின்னணிப் பாடகி, சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த திரைப்படத் தொகுப்பாளர், சிறந்த கலை இயக்குநர், சிறந்த சண்டைப்பயிற்சியாளர், சிறந்த நடன ஆசிரியர், சிறந்த ஒப்பனைக் கலைஞர், சிறந்த தையற்கலைஞர், சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (ஆண்) மற்றும் சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (பெண்) என, திரைப்படத் துறையில் சாதனை புரிந்தோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தலா 5 பவுன் தங்கப்பதக்கம், நினைவுப்பரிசு, சான்றிதழ் ஆகியன வழங்கப்படுகின்றன.

கடந்த 2009 முதல் 2014ஆம் ஆண்டுகளுக்கான சிறந்த முழுநீளத் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கான விருதுகள் வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை (நிலை) எண் 131, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தி.தொ.2)த்துறை, நாள் 13.07.2017) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் விரைவில் நடைபெறவிருக்கும் விழாவில் இந்த விருதுகள் அனைத்தும் வழங்கப்படவுள்ளன.

## ஆ) கலைத்துறை வித்தகர் விருதுகள்

தமிழ்த்திரை உலகில் தமது எழுத்தாலும் நடிப்பாலும் தனிமுத்திரை பதித்திட்ட பேரறிஞர் அண்ணா, மக்களை சிரிக்க வைத்துச் சிந்திக்க வைத்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர், உழைப்பால் உயர்ந்திட்ட நடிகர் ராஜாசாண்டோ, மக்கள் மனங்களைக் கொள்ளை கொண்ட மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., நடிப்பிற்கே இலக்கணமாகத் திகழ்ந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன், அழியாத பாடல்கள் படைத்த கவியரசு கண்ணதாசன், மக்களின் மனங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் புரட்சித் தலைவி அம்மா ஜெ ஜெயலலிதா ஆகியோரின் பெயர்களில் ‘கலைத்துறை வித்தகர் விருதுகள்’ தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விருதுகளைப் பெறுகின்ற கலைத்துறை வித்தகர்களுக்கு, தலா 5 பவுன் தங்கப்பதக்கமும், நினைவுப்பரிசும் வழங்கப்படுகின்றன.

## இ) அரசு திரைப்பட மானியம்

சமூகப் பொறுப்பும், சமுதாய விழிப்புணர்ச்சியுமிக்க திரைப்படங்களைத் தரமாகவும், சிறிய முதலீட்டிலும் தயாரித்து வெளியிடுவோரை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை, தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் வாயிலாக, குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்ப் படங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு திரைப்படத்திற்கும் இத்திட்டத்தின் வாயிலாக 7 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

கடந்த 2007ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுகளில், குறைந்த செலவில் தயாரித்து வெளியான தரமான 149 தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியமாக, தலா 7 இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடியே 43 இலட்சம் ரூபாய் வழங்கிட, அரசாணை எண் 1, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தி.தொ.2)த்துறை, நாள் 02.01.2018–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**ஈ) சின்னத்திரை விருதுகள்**

மக்களின் அன்றாட வாழ்க்கையின் பொழுதுபோக்கில் மிகப் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ள சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்கள், குறுந்தொடர்கள் அதில் பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், தமிழ்நாடு அரசின் சார்பில், சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசாக 2 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 1 இலட்சம் ரூபாய் ரொக்கம், நினைவுப் பரிசு உள்ளிட்ட சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமின்றி, சிறந்த கதாசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்) சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) மற்றும் சிறந்த தந்திரக் காட்சியாளர் எனச் சின்னத்திரைத் துறையில் சிறந்து விளங்குவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத்

தலா 3 பவுன் தங்கப் பதக்கமும், நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

மேலும், ஆண்டின் சிறந்த சாதனையாளர் மற்றும் சிறந்த வாழ்நாள் சாதனையாளராகத் தேர்வு செய்யப்படுவோருக்குத் தலா 1 இலட்சம் ரூபாய் ரொக்கமும், நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

கடந்த 2009ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ள சிறந்த தொடர்கள் மற்றும் சிறந்த கலைஞர்களுக்கான விருதுகள், ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கிட அரசாணை எண் 132, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தி.தொ.2)த்துறை, நாள் 13.07.2017–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் விரைவில் நடைபெறவிருக்கும் விழாவில் இத்தொகை வழங்கப்படவுள்ளது.

**உ) இந்திய சினிமா நூற்றாண்டு விழா மற்றும் சர்வதேச திரைப்பட விழாவிற்கு நிதியுதவி**

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் திரைப்பட உலகிற்குப் பெருமை சேர்த்திடும் வகையில், இந்திய சினிமா நூற்றாண்டு விழாவினைச் சிறப்பான முறையில் நடத்திட ஏதுவாக, இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழ்நாடு அரசின் சார்பில், இவ்விழாவினை நடத்திய தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைக்கு 10 கோடி ரூபாய் மானியமாக வழங்கினார்கள். இந்திய சினிமா நூற்றாண்டு விழாவானது, சென்னையில் கடந்த 21.9.2013 முதல் 24.9.2013 வரை வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவில் மேதகு இந்தியக்

குடியரசுத் தலைவர், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் மற்றும் பிற மாநில முதலமைச்சர்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

சென்னையில் பல்வேறு காலக் கட்டங்களில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு தமிழக அரசின் சார்பில் 3 கோடியே 25 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

- ஒன்பதாவது சென்னை சர்வதேச திரைப்பட விழா (14.12.2011 முதல் 22.12.2011 வரை) – 25 இலட்சம் ரூபாய் மானியம்.
- பத்தாவது சென்னை சர்வதேச திரைப்பட விழா (12.12.2012 முதல் 20.12.2012 வரை) – 50 இலட்சம் ரூபாய் மானியம்.
- பதினோராவது சென்னை சர்வதேச திரைப்பட விழா (12.12.2013 முதல் 19.12.2013 வரை) – 50 இலட்சம் ரூபாய் மானியம்.
- பன்னிரண்டாவது சென்னை சர்வதேச திரைப்பட விழா (18.12.2014 முதல் 25.12.2014 வரை) – 50 இலட்சம் ரூபாய் மானியம்.
- பதின்மூன்றாவது சென்னை சர்வதேச திரைப்பட விழா (6.1.2016 முதல் 13.1.2016 வரை) – 50 இலட்சம் ரூபாய் மானியம்.
- பதினான்காவது சென்னை சர்வதேச திரைப்பட விழா (05.01.2017 முதல் 12.01.2017 வரை) – 50 இலட்சம் ரூபாய் மானியம்.
- பதினைந்தாவது சென்னை சர்வதேச திரைப்பட விழா (14.12.2017 முதல் 21.12.2017 வரை) – 50 இலட்சம் ரூபாய் மானியம்.

# திரைப்படத்துறையினர் நலவாரியம்

திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரை சார்புடைய தொழிலாளர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் அனைவருக்கும் உதவிடும் உயரிய நோக்கிலும், அவர்கள் வளமுடன் வாழ வழிவகை செய்யும் எண்ணத்திலும், தமிழ்நாடு அரசு சார்பில், திரைப்படத் துறையினர் நலவாரியம் உருவாக்கப்பட்டு, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நலவாரியத்தில், 39 சங்கங்களைச் சார்ந்த திரைப்பட / சின்னத்திரைத் தொழிலாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் உறுப்பினர்களாகச் சேரத் தகுதி பெற்றவர்கள் ஆவர். இந்நலவாரியத்தில் நாளதுவரையில், 21,045 நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர்.

திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரையின் படைப்பாக்கத்தில் பங்கேற்றுப் பணியாற்றும் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு விபத்து ஈட்டுறுதித் திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைவு உதவித்தொகை, மூக்குக்கண்ணாடி உதவித்தொகை போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் வாயிலாக உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறு வழங்கப்படும் உதவித் தொகைகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் | உதவித்தொகை |
|---|---|---|
| 1 | **விபத்து ஈட்டுறுதித் திட்டம்**<br>(அ) விபத்தினால் ஏற்படும் மரணம் | 1 இலட்சம் ரூபாய் |
| | (ஆ) விபத்தினால் ஏற்படும் ஊனம் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000 ரூபாய் முதல் 1 இலட்சம் ரூபாய் வரை |
| 2 | இயற்கை மரணம் உதவித்தொகை | 15,000 ரூபாய் |
| 3 | ஈமச் சடங்கு உதவித் தொகை | 2,000 ரூபாய் |
| **4. கல்வி உதவித் தொகை** | | |
| அ) | 10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 ரூபாய் |
| ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பெண் குழந்தைகளுக்கு | 1,000 ரூபாய் |
| இ) | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 ரூபாய் |
| | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்க்கு (இரு பாலருக்கும்) | 1,500 ரூபாய் |
| ஈ) | முறையான பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு (இரு பாலருக்கும்) | 1,500 ரூபாய் |
| | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,750 ரூபாய் |
| உ) | முறையான பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 2,000 ரூபாய் |
| | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 3,000 ரூபாய் |
| ஊ) | தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 2,000 ரூபாய் |

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் | உதவித்தொகை |
|---|---|---|
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 4,000 ரூபாய் |
| எ) | தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு (இரு பாலருக்கும்) | 4,000 ரூபாய் |
| | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 6,000 ரூபாய் |
| ஏ) | ஐ.டி.ஐ. தொழில் பயிற்சி அல்லது பலவகை தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,000 ரூபாய் |
| | மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது பலவகை தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,200 ரூபாய் |
| 5 | திருமண உதவித் தொகை | 2,000 ரூபாய் |
| 6 | மகப்பேறு உதவித் தொகை | 6,000 ரூபாய் |
| 7 | கருக்கலைப்பு / கருச்சிதைவு உதவித் தொகை | 3,000 ரூபாய் |
| 8 | மூக்குக் கண்ணாடிச் செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 ரூபாய் |

திரைப்படத்துறையினர் நலவாரியத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள நலத்திட்ட உதவிகளுக்கான விவரங்கள் ஆண்டு வாரியாகப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன:

| வ. எண் | ஆண்டு | மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2011 | 38 | 1,98,000/– |
| 2 | 2013 | 728 | 21,39,000/– |
| 3 | 2014 | 303 | 8,00,000/– |
| 4 | 2016 | 277 | 8,00,250/– |
| 5 | 2017 | 259 | 9,41,500/– |
| | மொத்தம் | 1,605 | 48,78,750/– |

மேலும், பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கிடக் கோரி, **2016**ஆம் ஆண்டில் **286** விண்ணப்பங்களும், **2017**ஆம் ஆண்டில் **163** விண்ணப்பங்களும் வரப்பெற்று, நிதி ஒதுக்கீடு கோரி, அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

திரைப்படத்துறையினர் நலவாரியத்திற்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்கள் உறுப்பினர் / செயலாளராகவும் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:

## அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்

துறைச் செயலாளர், வணிகவரித்துறை ஆணையர், உள்துறைத் துணைச் செயலாளர் (சினிமா), தொழிலாளர் நலத்துறை ஆணையர், நில நிருவாகத்துறை ஆணையர் ஆகிய எட்டு அரசு உயர் அலுவலர்கள் அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் ஆவர்.

## அலுவல் சாரா உறுப்பினர்கள்

திருவாளர்கள் ஆர்.வி. உதயகுமார் (இயக்குநர்), பி. வாசு (இயக்குநர்), லியாகத் அலிகான் (வசனகர்த்தா), மோகன் காந்திராமன் (இயக்குநர்), ராமராஜன் (நடிகர்), டி.கே.கலா (நடிகை மற்றும் பாடகி), எல்.ஆர்.ஈஸ்வரி (திரைப்படப்பின்னணிப்பாடகி), புஷ்பா கந்தசாமி (தயாரிப்பாளர்), நாஞ்சில் பி.சி. அன்பழகன் (இயக்குநர்) ஆகிய ஒன்பது திரைத்துறை சார்ந்த வல்லுநர்கள் வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களாக உள்ளனர்.

இவ்வாரியத்தின் வாயிலாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் இக்குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு, பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

# தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

## அ) செய்திப் படப்பிடிப்பு

இப்பிரிவின் வாயிலாக, தமிழகமெங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோரால் தொடங்கி வைக்கப்படும் அரசின் திட்டப்பணிகள், நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழாக்கள், காணொளிக்காட்சி விழாக்கள், முக்கியப் பிரமுகர்கள் வருகை மற்றும் சந்திப்பு தொடர்புடைய நிகழ்வுகள் அனைத்தும் காணொலிக்காட்சியாகப் பதிவு செய்திடும் மிக முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வுகள் அனைத்தும் முறையாகத் தொகுக்கப்பட்டு, செய்திமலராகத் தயாரிக்கப் படுகின்றன. அனைத்துத் தரப்பினரும் அறிந்து பயனடைகின்ற வகையில், இச்செய்தி மலர்கள் முறையாகத் தணிக்கை செய்யப்பட்டு, அனைத்துத் திரையரங்குகளிலும் ஒளிபரப்பப்படுவதோடு, மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அகண்ட திரையுடன் கூடிய மின்னணு வீடியோ வாகனம் வாயிலாகக் களவிளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## ஆ) படக்காட்சி செய்தி மலர்கள் / கருத்து விளக்கப்படங்கள் / குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்கள்

2011ஆம் ஆண்டு தொடங்கி நாளது வரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முத்தான திட்டங்கள் குறித்து 169 வீடியோ செய்தி மலர்கள் / கருத்து

விளக்கப்படங்கள் / குறும்படங்கள், 68 குறும்பாடல்கள் மற்றும் 23 வாரச் செய்தி மலர்கள் தயாரிக்கப்பட்டு, தமிழகத்தின் அனைத்து 'எண்மம்' (Digital) திரையரங்குகளிலும் திரையிடப்பட்டன. மேலும், தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட 147 காணொலிக்காட்சி நிகழ்ச்சிகள் தொகுக்கப்பட்டு, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனம் வாயிலாக (Tamil Nadu Arasu Cable TV Corporation) பொதுமக்களுக்கு ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

இவையனைத்தும் குறுந்தகடுகளில் பதிவேற்றம் செய்யப்பட்டு மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அகண்ட திரை மின்னணு வீடியோ வாகனம் வாயிலாக, அனைத்துத் தரப்பினரும் கண்டு பயனடைகின்ற வகையில், மிகச் செம்மையான முறையில் கள விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப, படக்காட்சிச் செய்தி மலர்கள் தலைமையிடத்திலிருந்து பதிவேற்றம் செய்யப்பட்டு, அதிகளவில் மக்கள் வந்து செல்லும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், அம்மா உணவகங்களிலும் வைக்கப்பட்டுள்ள மின்னணுத் தொலைக்காட்சி (LED TV) வாயிலாகத் திரையிடப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு, தலைமைச் செயலகத்தில் உள்ள ஊடக மையத்தின் மூலம் அனைத்து ஊடகங்களுக்கும் படக்காட்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் தலைமையிலான அரசு சிறந்த முறையில் ஓராண்டு நிறைவு செய்துள்ளதனைப் பறைசாற்றிடும் வகையில், செய்தித்துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள பல்வேறு குறும்படங்கள் மற்றும் குறும்பாடல்கள் (Jingles) விவரம் பின்வருமாறு:

| வ. எண் | குறும்படங்கள் |
|---|---|
| 1 | அம்மாவின் வழியில் நல்லாட்சி – அதற்கு ஓராண்டுச் சாதனையே சாட்சி<br>ஓராண்டுச் சாதனை – பகுதி 1 |
| 2 | ஓராண்டுச் சாதனை – பகுதி 2 |
| 3 | ஓராண்டுச் சாதனை – பகுதி 3 |
| 4 | சரித்திரம் போற்றும் சாமானிய மக்களின் முதல்வர் |
| 5 | அம்மா இருசக்கர வாகனம் |
| 6 | ஜல்லிக்கட்டு |
| 7 | விவசாயிகளின் தோழர் |
| 8 | மெட்ரோ இரயில் சேவை |
| 9 | உயர்கல்வித்துறை (உயரவைக்கும் திட்டங்கள்) |
| 10 | மாற்றுத் திறனாளிகள் (நம்பிக்கை ஒளி) |
| 11 | உடல் உறுப்பு தானம் |
| 12 | சுகாதாரத் திட்டங்கள் |
| 13 | தொழில்துறை |
| 14 | பால்வளத்துறை |
| 15 | விளையாட்டுத்துறை (உடலுக்கு உரம்) |
| 16 | பாலங்கள் மற்றும் சாலைகள் |
| 17 | அரசு கேபிள் டி.வி (செட்டாப் பாக்ஸ்) |

| வ. எண் | **குறும்பாடல்கள்** |
|---|---|
| 1 | கூட்டுப்பண்ணை |
| 2 | மடிக்கணினி |
| 3 | M-SAND (ஆற்று மணலுக்கு மாற்று மணல்) |
| 4 | மகளிர் வாழ்வு (மகளிர் நலன் காக்கும் மக்கள் அரசு) |
| 5 | நீராபானம் |
| 6 | நீர்வளம் |
| 7 | ஆசிரியர் பணி வழங்கிய அம்மா வழி அரசு |
| 8 | 108க்கு ஓர் அற்புதச் செயலி |
| 9 | தமிழ் வளர்க்கும் தங்கத்தாயின் அரசு |

# எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் திரைப்படத் தயாரிப்பில், தொழில்நுட்பக் கல்வி நுணுக்கங்களையும், கலை உணர்வுகளையும் பயிற்றுவிக்கும் முன்னோடி அரசு நிறுவனம் ஆகும். பல்வகையான திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில் நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப் பாடங்களையும் மாணவர்களுக்குக் கற்றுத்தருவதொன்றையே பிரதானக் குறிக்கோள்களாகக் கொண்டு, இந்நிறுவனம் திறம்படச் செயலாற்றி வருகிறது.

அகில இந்திய அளவில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சிகளை அளித்திடும் மூன்று முன்னோடி நிறுவனங்களில், தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை கட்டுப்பாட்டில் இயங்கி வரும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் ஒன்றாகும். புனேயில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும், கொல்கத்தாவில் உள்ள சத்தியஜித்ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் ஏனைய பிற நிறுவனங்களாகும்.

**அ) பட்டப் படிப்புகள்**

அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக்குழு (AICTE) அங்கீகாரத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டு வழங்கப்பட்டு வந்த பட்டயப் படிப்புகள் மாண்புமிகு முதலமைச்சரின் ஆணைப்படி இளங்கலைக் காட்சிக்கலை (Bachelor of Visual Arts) நான்காண்டுப் பட்டப்படிப்பாக மாற்றப்பட்டு **2016–2017** ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

- இளங்கலைக் காட்சிக்கலை (ஒளிப்பதிவு) – Bachelor of Visual Arts (Cinematography)
- இளங்கலைக் காட்சிக்கலை (எண்மிய இடைநிலை) – Bachelor of Visual Arts (Digital Intermediate)
- இளங்கலைக் காட்சிக்கலை (ஒலிப்பதிவு) – Bachelor of Visual Arts (Audiography)
- இளங்கலைக் காட்சிக்கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்) – Bachelor of Visual Arts (Direction and Screenplay Writing)
- இளங்கலைக் காட்சிக்கலை (படத்தொகுப்பு) – Bachelor of Visual Arts (Film Editing)
- இளங்கலைக் காட்சிக்கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன்) – Bachelor of Visual Arts (Animation and Visual Effects) என ஆறு பாடப்பிரிவுகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன.

இதுநாள்வரை வழங்கப்பட்டு வந்த Diploma in Film Technology என்ற பட்டயப்படிப்பிற்குப் பதிலாக Bachelor of Visual Arts என்கிற பட்டம் வழங்கப்படவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் சேர்க்கப்படும் 14 மாணவர்களின் கல்விக் கட்டணமாக 15,000/–ரூபாயும், சிறப்புக் கட்டணமாக 2,000/–ரூபாயும், வளர்ச்சிக் கட்டணமாக 1,000/–ரூபாயும், வசூலிக்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் செலுத்துவது முற்றிலுமாக விலக்களிக்கப்பட்டுள்ளது.

## ஆ) வருடாந்திர வரவு–செலவு ஒதுக்கீடு

இந்நிறுவனச் செலவினங்களுக்காக ஆண்டுதோறும் 5.38 கோடி ரூபாய் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## இ) மாணவர்கள் தயாரிக்கும் படங்களுக்கு நிதியுதவி

கல்வி இறுதியாண்டில், அனைத்துத் துறைகளிலும் பயிலும் மாணவர்கள் ஒன்றிணைந்து 14 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவும் ஒரு பட்டயக் குறும்படம் வீதம், 14 பட்டயப் படங்கள் தயாரித்திடப் போதிய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மேலும், 2017–2018ஆம் நிதியாண்டு முதல், பட்டயப் படிப்பு மாணவர்களின் படப்பிடிப்பு தயாரிப்புச் செலவிற்காக, மாணவர் ஒருவருக்கு, ஒரு பட்டயப் படம் தயாரித்திட அளிக்கப்படும் நிதியுதவியானது, 15,000/– ரூபாயிலிருந்து 50,000/– ரூபாயாக உயர்த்தி, தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

## ஈ) குறும்பட விருது

**"எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்குக் குறும்பட விருது"** என்கிற பெயரில், இந்நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்படும் குறும்படங்களில் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படப்பதனிடுபவர் எனச் சிறந்த வல்லுநர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குத் தலா ஒரு பவுன் தங்கப் பதக்கத்துடன் 5,000/– ரூபாய் ரொக்கப் பரிசு, நினைவுக் கேடயம் ஆகியன வழங்கப்பட்டு, பாராட்டப்படுகின்றனர்.

## உ) அகில இந்திய சர்வதேச திரைப்பட விழா

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சார்ந்த மாணவர்களின் பட்டயக் குறும்படங்கள் ஆண்டுதோறும், கோவாவில் நடைபெற்று வரும் அகில இந்தியத் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டு வருகின்றன.

## ஊ) அம்மா விருது

ஆண்டுதோறும் "சென்னை சர்வதேச திரைப்பட விழா"வில் பங்கேற்கும் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தைச் சேர்ந்த மாணவர்களின் குறும்படங்களுக்கு "அம்மா விருது" என்ற பெயரில் சிறப்பு விருது மற்றும் 10,000 ரூபாய் ரொக்கப்பரிசும் வழங்கப்பட்டு வருகின்றன.

சென்னை சர்வதேச திரைப்பட விழாவில் பங்கேற்று அம்மா விருது பெற்ற குறும்படங்களின் விவரம்:

| வ. எண் | விழா | ஆண்டு | குறும்படத்தின் பெயர் |
|---|---|---|---|
| 1 | 12வது சர்வதேச திரைப்பட விழா | 2014–15 | "ச்சீ" |
| 2 | 13வது சர்வதேச திரைப்பட விழா | 2015–16 | "புர்ர்ரா" |
| 3 | 14வது சர்வதேச திரைப்பட விழா | 2016–17 | "உத்தமன்" |
| 4 | 15வது சர்வதேச திரைப்பட விழா | 2017–18 | "டெய்சி" |

## எ) மாணவர்களுக்கு நவீனத் தொழில்நுட்பத்தில் பயிற்சி

மாணவர்களின் பட்டயக் குறும்படங்களுக்காகவும் மற்றும் செயல்முறைப் பயிற்சிக்காகவும் தற்போது வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கேற்ப, திரைப்படத் துறைக்கு இணையான நவீனத் தொழில்நுட்பக் கருவிகள் ஒரு கோடியே **50** இலட்சம் ரூபாய் நிதியுதவியின் வாயிலாக, வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்டு, மாணவர்களுக்குத் தரமான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## ஏ) 2011–2012 முதல் 2017–2018 பகுதி 2 திட்டம், மானியக் கோரிக்கை அறிவிப்புகளின்கீழ் நிதி ஒதுக்கீடு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் மற்றும் பகுதி–2 திட்டம் ஆகியவற்றின்படி, கடந்த **2011–2012**ஆம் ஆண்டு தொடங்கி **2017–2018** ஆம் ஆண்டு வரையில், இந்நிறுவனத்திற்கு **16** கோடியே **89** இலட்சத்து **62** ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

திரைப்படம் என்பது அனைத்து தரப்பு மக்களிடம் பொதுவாக வழக்கத்திலுள்ள எளிதாக செல்லக்கூடிய பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்றாக திகழ்வதால் திரைப்படத்துறையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு அரசு இத்துறையை ஊக்குவித்து வருகிறது.

தமிழ்நாட்டில், தற்போது 1013 திரையரங்குகள் கீழ்கண்டுள்ள இனங்களின்படி இயங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | 983 |
| 2. | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 12 |
| 3. | நடமாடும் திரையரங்குகள் | 07 |
| 4. | திறந்தவெளித் திரையரங்குகள் | 11 |
| | மொத்தம் | 1,013 |

திரையரங்குகளில் திரைப்படம் திரையிடுவதை முறைப்படுத்துவதற்கு, தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டப்பிரிவுகளின்படி, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை காவல்துறை ஆணையரும், திரையரங்குகளை அமைப்பதற்கு தடையின்மை சான்றும், திரைப்படங்களை

திரையிடுவதற்கு உரிமம் வழங்கும் தகுதி உடைய அதிகாரிகள் ஆவர். இணை ஆணையர், நிலநிருவாக ஆணையரகம் மற்றும் அரசு உள்துறை ஆகியோர் முறையே மேல் முறையீட்டு அதிகாரியாகவும், சீராய்வு மேற்கொள்ளும் அதிகார அமைப்பாகவும் செயல்பட இச்சட்டப்பிரிவுகளின்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. திரைப்படத் துறையை ஒழுங்குபடுத்தவும் திரையரங்குகளில் திரைப்படம் காணவரும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள், சுகாதாரமான சூழல், பாதுகாப்பு மற்றும் பிற நல அம்சங்கள் வழங்க உறுதி செய்யும் வகையிலும் தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள், **1957**–ல் அரசு கடுமையான வழிமுறைகளை வகுத்துள்ளது. மேலும், இந்த விதிகளின் கீழ் அரசு பார்வையாளர்களின் அனுமதி கட்டணத்தை நிர்ணயிக்கிறது.

அதன்படி, தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் மற்றும் தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர் சம்மேளனம் ஆகியவற்றின் கோரிக்கைகளைப் பரிசீலித்து, அரசாணை (நிலை) எண்.**762**, உள் (சினிமா) துறை, நாள் **16.10.2017**–ல், குளிர்ப்பதன வசதி கொண்ட மல்டிபிளக்ஸ் திரையரங்குகளுக்கும், மாநகராட்சிகள்/நகராட்சிகள்/நகரப் பஞ்சாயத்துகள் மற்றும் கிராமப் பஞ்சாயத்துகள் ஆகியவற்றில் அமைந்துள்ள, குளிர்ப்பதன வசதி கொண்ட/குளிர்ப்பதன வசதியில்லாத இதர திரையரங்குகளுக்கும், அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச நுழைவுக் கட்டணத்தைத் திருத்தியமைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

## கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு

இந்தியா முழுவதும் உள்ள கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பினை 1995–ம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்புச் (முறைப்படுத்துதல்) சட்டம் (மத்திய சட்டம் 7/1995) முறைப்படுத்துகிறது. மேற்சொல்லப்பட்ட சட்டத்தின்படி, மாவட்ட மற்றும் உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டுகள் மற்றும் மாநகர காவல் துறை ஆணையாளர் ஆகியோர் இச்சட்டத்தின் 3, 4A, 5, 6, 8, மற்றும் 9 (அல்லது) 10 ஆகிய பிரிவுகளை மீறும், கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, தமிழக அரசு சென்னை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் மாநகர காவல்துறை ஆணையாளர்கள், மாவட்டங்களைப் பொறுத்தளவில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்களை கேபிள் தொலைக்காட்சி சட்டத்தில் உள்ள நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு, அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமித்து அறிவிக்கை வெளியிட்டுள்ளது. மேலும், கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டத்தினை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மாநகரக் காவல் ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## வீடியோ சட்டமும் விதிகளும்

**1984**–ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மற்றும் கேபிள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில், திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டம், தமிழ்நாட்டில், வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்பு செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல்துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அதிகாரிகள்.

## அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு

காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடி கட்டுப்பாட்டின் கீழ், குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையில் வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவு இயங்கி வருகிறது. காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநருக்கு உதவி செய்யும் பொருட்டு மாநில அளவில் ஒரு காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் தற்போது

சென்னை (2), புனித தோமையார் மலை (1), வேலூர் (1), சேலம் (1), கோயம்புத்தூர் (1), திருச்சி (1), கடலூர் (1), மதுரை (1), திண்டுக்கல் (1), விருதுநகர் (1) மற்றும் திருநெல்வேலி (1) ஆகிய பன்னிரண்டு இடங்களில் வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு அலகும், ஒரு காவல் ஆய்வாளர், ஒரு உதவி ஆய்வாளர் மற்றும் ஆறு முதல் நிலை காவலர்களை உள்ளடக்கியதாகும். சென்னையைப் பொறுத்த வரை இரண்டு அலகுகள் இயங்கி வருகின்றன. அதில் அலகு 1–ல் ஒரு ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள், எட்டு முதல் நிலை காவலர்கள் மற்றும் இரண்டு இரண்டாம் நிலை காவலர்கள் உள்ளனர். அலகு 2–ல் ஒரு ஆய்வாளர், இரண்டு உதவி ஆய்வாளர்கள், மற்றும் எட்டு முதல் நிலை காவலர்கள் உள்ளனர். 1957–ம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம் மற்றும் 2000–ம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்கவும் இப்பிரிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவினால் 2004–ம் ஆண்டு முதல் 2018–ம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, அவ்வழக்குகளில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு முதலிய விவரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன :–

## அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்த விபரம் (2004 முதல் 2018 (31.03.2018 வரை)

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட சொத்தின் மதிப்பு (ரூபாய்) | கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2004 | 1151 | 1206 | 12,06,43,647 | 53 |
| 2005 | 813 | 950 | 9,44,55,557 | 13 |
| 2006 | 1153 | 1193 | 19,00,04,502 | 10 |
| 2007 | 1844 | 1866 | 17,38,74,360 | 9 |
| 2008 | 1968 | 1955 | 1,72,23,401 | 17 |
| 2009 | 2204 | 2201 | 8,32,59,759 | 31 |
| 2010 | 2690 | 2664 | 14,38,31,530 | 34 |
| 2011 | 2665 | 2648 | 10,78,74,745 | 9 |
| 2012 | 2858 | 2838 | 14,36,05,175 | 2 |
| 2013 | 3020 | 3004 | 36,57,57,107 | 2 |
| 2014 | 3320 | 3320 | 17,75,02,306 | 29 |
| 2015 | 3406 | 3406 | 11,65,23,631 | 51 |
| 2016 | 4893 | 4906 | 26,14,13,385 | 21 |
| 2017 | 5589 | 5591 | 51,24,96,880 | 13 |
| 2018 (31.3.18 வரை) | 903 | 909 | 2,19,28,769 | 19 |

இது தவிர, வீடியோ திருட்டில் ஈடுபடுபவர்கள் மீது குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1982) கீழும் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. வீடியோ திருட்டு சம்பந்தமான குற்றங்களுக்காக, 2017–2018–ம் ஆண்டில் 4 நபர்கள் குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# தமிழரசு

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் ‘‘தமிழரசு’’ இதழ், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் திங்கள்தோறும் வெளியிடப்படுகிறது. ‘தமிழரசு இதழ், அது தமிழ்நாடு அரசிதழ்’ என்னும் வகையில், அரசின் கொள்கைகளை, எண்ணங்களை, திட்டங்களை, சாதனைகளை இதழ் வடிவில் கண்ணாடிபோல் பிரதிபலித்து வருகிறது.

‘தமிழரசு’ இதழில், மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின் உரைத் தொகுப்புகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரைத் தொகுப்புகள் மற்றும் அறிவிப்புகள், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்களின் உரைகள் மற்றும் அறிவிப்புகள், தமிழக அரசின் அளப்பரிய சாதனைகள், மக்கள் நலத் திட்டங்களின் செயல்பாடுகள், அரசு நலத்திட்ட உதவிகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவான கட்டுரைகள், மாநிலம் முழுவதிலும் உள்ள நலத்திட்ட உதவிகள் பெற்ற பயனாளிகளின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் வெற்றிக் கதைகள் ஆகியவையும் அனைத்துத் தரப்பினரும் படித்துப் பயனடைந்திடும் வகையிலும் முக்கிய அரசாணைகள் உள்ளிட்டவையும் வெளியிடப்படுகின்றன.

மேலும், மகளிர் நலம், குடும்ப நலம், மருத்துவம், இரத்ததானம், எய்ட்ஸ் விழிப்புணர்வு உள்ளிட்ட சமூக நலம் சார்ந்த அரசின் திட்டங்களை விளக்கிடும் கட்டுரைகள், தமிழ் இலக்கிய வளத்தை உணர்த்தும் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் ஆகியவற்றுடன் அரசு மற்றும் அரசுத்துறை

சார்ந்த நிறுவனங்களின் விளம்பரங்களையும் தாங்கித் தமிழரசு இதழ், வெளியிடப்பட்டு வருகிறது. மாதந்தோறும் 34,000க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் தமிழ் இதழ்களும், 2,400 க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் ஆங்கில இதழ்களும் அச்சிடப்பட்டு வருகின்றன.

'தமிழரசு' தமிழ் மற்றும் ஆங்கிலம் இதழ்களின் விலை, ஒவ்வொன்றும் 20/– ரூபாயாகவும், ஆண்டுச் சந்தா ஒவ்வொன்றுக்கும் 240/– ரூபாயாகவும், ஆயுள் சந்தா தமிழ் (10 ஆண்டுகளுக்கு) 2,000/–ரூபாயாகவும், ஆயுள் சந்தா ஆங்கிலம் (10 ஆண்டுகளுக்கு) 2,400/– ரூபாயாகவும், நிருணயிக்கப்பட்டுள்ளது.

## அ) சிறப்பு வெளியீடுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முக்கிய நிகழ்ச்சிகளில் ஆற்றிய தமிழ் மற்றும் ஆங்கில உரைகள் அடங்கிய சிறப்பு வெளியீடுகள் அவ்வப்பொழுது வெளியிடப்பட்டு, மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் வாயிலாகப் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.

தமிழரசு இதழ் மட்டுமின்றி, தலைவர்கள், தியாகிகள் மற்றும் சான்றோர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய மடிப்பேடுகள், சிறப்புக் கையேடுகள், தொலைபேசி சிறு கையேடு, அரசு விழா அழைப்பிதழ்கள் ஆகியவையும் அழகிய முறையில் வடிவமைத்து, தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகின்றன. மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இதரப் பிரிவுகளுக்குரிய விண்ணப்பங்கள் மற்றும் படிவங்கள் போன்றவையும் இங்கு அச்சிடப்படுகின்றன.

## ஆ) சாதனை மலர்கள்

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில், நிலையான ஆட்சி – நிரந்தர வளர்ச்சி – **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின் தலைமையிலான அரசின் 100 நாள் சாதனைகளைத் துறைவாரியாகத் தொகுத்துச் சிறப்பு மலர் வெளியிடப்பட்டுள்ளன.

## இ) மடிப்பேடுகள்

அனைத்து மாவட்ட நினைவகங்களுக்குத் “தமிழரசு” சார்பில் கடந்த 2011ஆம் ஆண்டு மே திங்கள் தொடங்கி, நாளதுவரை பல்வேறு தலைவர்கள், தியாகிகள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள் மடிப்பேடுகளாக அச்சடிக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## ஈ) சிறப்பு வெளியீடுகள்

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்களின் தலைமையிலான நல்லாட்சி ஓராண்டு நிறைவு செய்துள்ளதனைப் பறைசாற்றிடும் வகையில், இத்துறையின் சார்பில் அச்சிட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 23.03.2018 அன்று நடைபெற்ற ஓராண்டுச் சாதனை விழாவில் வெளியிடப்பட்டுள்ள சிறப்பு வெளியீடுகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | தலைப்பு |
|---|---|
| 1 | அம்மா வழியில் நல்லாட்சி – அதற்கு ஓராண்டுச் சாதனையே சாட்சி (தமிழ்நாடு அரசின் ஓராண்டுச் சாதனை மலர்) – தமிழ் பதிப்பு |
| 2 | One Year Achievement is the Proof of Good Governance in the Path of Amma (One Year of Achievements of the Government) – English Edition |
| 3 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள், விதி 110–ன் கீழான அறிவிப்புகள் (19.06.2017 முதல் 11.01.2018 வரை) மற்றும் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்திற்கான பதிலுரை |
| 4 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் தமிழக மாவட்டங்களில் நடைபெற்ற பாரதரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் அறிவித்த சிறப்பு அறிவிப்புகள் |
| 5 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்கள் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் ஆற்றிய எழுச்சி உரைகளின் தொகுப்பு |
| 6 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட பொன்மொழிகள் |

| வ. எண் | தலைப்பு |
|---|---|
| 7 | **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி** அவர்கள் கடந்த ஓராண்டில் கலந்து கொண்டு சிறப்பித்த முக்கிய நிகழ்வுகளின் புகைப்படத் தொகுப்பு |
| 8 | அம்மா வழியில் நல்லாட்சி – அதற்கு ஓராண்டு சாதனையே சாட்சி (32) மாவட்டங்களின் ஓராண்டு சாதனைகள்) |

## உ) பாரதரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழா சிறப்பு வெளியீடுகள்.

பாரதரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, அப்பெருமகனார் சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள், அரசு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள், பொன் மொழிகள் ஆகிவற்றின் தொகுப்புகள் மற்றும் அன்னாரின் நினைவினைப் போற்றி, பெருமை சேர்க்கின்ற வகையில் நூற்றாண்டு நினைவு மலர் அச்சிடும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

## ஊ) புதிய இயந்திரம் கொள்முதல்

தமிழரசு அச்சகத்தின் சிறப்பு வெளியீடுகள் பணிகளுக்காக, ரூ.25 இலட்சம் செலவில், Digital Printer கொள்முதல் செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## எ) நவீன மென்பொருள்

தமிழரசு அலுவலக வரலாற்றில் முதன் முறையாகத் தமிழ் மற்றும் ஆங்கிலம் இதழ்களுக்கான ஆண்டுச் சந்தா மற்றும் ஆயுள் சந்தா விவரங்கள் ஆகியவற்றை எளிதான முறையில் பராமரித்திட ஏதுவாக 12.46 இலட்சம் ரூபாய்ச் செலவில் முற்றிலும் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, அனைத்து மாத, ஆண்டு மற்றும் ஆயுள் சந்தா விவரங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு, சந்தா முடிவுறுங் காலங்களில் சந்தாதாரர்களுக்கு நினைவூட்டும் வகையில், குறுஞ்செய்தி அனுப்பிடும் வசதி மற்றும் குறித்த காலத்திற்குள்ளாக இதழ்களை அனுப்புதல் உள்ளிட்ட பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## பொருட்காட்சிப் பிரிவு

அரசின் அனைத்துத் துறை சார்ந்த திட்டங்கள், சாதனைகள் குறித்த விவரங்கள், காணொளிக் காட்சிகள், குறும்படங்கள், பலவகையான பொழுதுபோக்கு அம்சங்கள் உள்ளிட்ட அனைத்தையும் ஒரு குடையின்கீழ் ஒருங்கிணைத்திடும் உன்னத சாதனமே பொருட்காட்சி ஆகும். சிறியோர் முதற்கொண்டு பெரியோர் வரையிலான அனைத்துத் தரப்பினரையும் வெகுவாக ஈர்த்திடும் அளப்பரிய சக்தி இது போன்ற பொருட்காட்சிகளுக்கு உண்டு என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

அரசின் சார்பில், மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்படும் இப்பொருட்காட்சிகளில் அரசின் சாதனைகள், நலத்திட்டங்கள், அவற்றைப் பெற்றிடத் தேவையான தகுதிகள் ஆகியவற்றைப் பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் வரிசைப்படுத்தி, கண் கவரும் முறையில் காட்சிப்படுத்தப்பட்டு களவிளம்பரப் பணிகள் மேற் கொள்ளப்படுகின்றன. இப்பொருட்காட்சிகளில் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பங்கேற்கின்றன. அரசால் நடத்தப்படும் பொருட்காட்சிகள் வாயிலாக, நேரடியாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலைவாய்ப்பை அளித்து வருவதும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். மேலும், இப்பொருட்காட்சிகளில், நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில், நாள்தோறும் கலைநிகழ்ச்சிகள் நடத்திட, அவர்களுக்கு நல்வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில், பத்து அரசுப் பொருட்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. மதுரை, கோயம்புத்தூர், சேலம், வேலூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் ஒவ்வொரு ஆண்டும் மற்றும் ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில், சுழற்சி முறையில், 4 மாவட்டங்களிலும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

கடந்த 6 ஆண்டுகளில் மட்டும் தமிழகத்தில் 60 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு அவற்றின் வாயிலாக அரசிற்கு நிகர வருவாயாக ரூபாய் 12 கோடியே 90 லட்சத்து 80 ஆயிரம் ஈட்டப்பட்டுள்ளது.

## அ) பாரதரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாப் புகைப்படக் கண்காட்சி

பாரதரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, கடந்த 2017ஆம் ஆண்டு மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்பட்ட 7 அரசுப் பொருட்காட்சிகளில், பெரிய அளவிலான தனி அரங்கில், பாரதரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரிய ஒளிப்படங்கள் இடம் பெற்ற சிறப்பு ஒளிப்படக் கண்காட்சி அமைக்கப்பட்டது. இதனைப் பார்வையிட்ட தாய்மார்களிடையேயும், பொதுமக்களிடையேயும் மிகுந்த வரவேற்பினையும் ஏகோபித்த பாராட்டுதல்களையும் பாரத ரத்னா எம்.ஜி.ஆர். சிறப்பு ஒளிப்படக் கண்காட்சி அரங்கு பெற்றது.

## ஆ) தனியார் பொருட்காட்சிகள்

முற்றிலும் வணிக நோக்குடன், வரைமுறைகளின்றி தனியாரால் நடத்தப்பட்டு வந்த பொருட்காட்சிகள், முழுமையாக முறைப்படுத்தப்பட்டு, பொதுமக்களின் நன்மைக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் உரிய விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. மாவட்டங்களில் தனியார் பொருட்காட்சிகள் முறையாக நடத்தப்பட, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையின் அடிப்படையில், செய்தி மக்கள் தொடர்புத் துறை வாயிலாக, அனுமதி வழங்கப்படுகிறது.

## இ) புதுடெல்லி மலர்ப்பேரணி

இந்தியத் துணைக்கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணி விழாவில், தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை தொடர்ந்து பங்கேற்று வருகிறது. **2012, 2013, 2014, 2015, 2016** மற்றும் **2017**ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற மலர்ப்பேரணி விழாக்களில் தமிழ்நாடு அரசு பங்கேற்று முதல் பரிசு பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈ ) குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள்

சென்னை மற்றும் புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் பங்கேற்பதும், சென்னையில் நடைபெறும் குடியரசு நாள் விழாவில், தமிழக அரசின் பல்வேறு திட்டங்களை

வெளிப்படுத்துவது செய்தித்துறையின் சார்பில் தனி அலங்கார ஊர்தி அமைப்பதுடன், அரசின் பல துறைகளின் சார்பிலான அலங்கார ஊர்திகள் வடிவமைப்பு மற்றும் அணிவகுப்பு ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் முக்கியப் பணிகளாகும்.

சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வடிவமைக்கப்பட்ட அலங்கார ஊர்தி **2012**ஆம் ஆண்டில் முதல் பரிசும், **2013, 2014, 2015, 2016** ஆகிய ஆண்டுகளில் இரண்டாம் பரிசும், **2017** மற்றும் **2018**ஆம் ஆண்டுகளில் மூன்றாம் பரிசும் பெற்றுள்ளது.

மேலும், கடந்த **2014**ஆம் ஆண்டு, புதுடெல்லியில் நடைபெற்ற அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில், தமிழகத்தின் பாரம்பரியத்தினைப் பறைசாற்றிடும் வகையில், பொங்கல் விழாவினைச் சித்திரிக்கும் தமிழ்நாடு அலங்கார ஊர்திக்கு அகில இந்திய அளவில், இரண்டாம் பரிசு வழங்கப்பட்டு, சிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த **2016**ஆம் ஆண்டு அகில இந்திய அளவில், புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள் அணிவகுப்பிற்குத் தமிழ்நாடு அரசு தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டத்தில் வசித்துவரும் “தோடர்கள்” மலைவாழ் பழங்குடி இனத்தினருக்குப் பெருமை சேர்த்திடும் வகையில், அலங்கார ஊர்தி வடிவமைக்கப்பட்டு, பங்கேற்றுள்ளது.

2017ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் பாரம்பரிய நாட்டுப்புறக் கலையான கரகாட்டத்தின் சிறப்பினைப் பறைசாற்றிடும் வகையில், வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் அலங்கார ஊர்தி அகில இந்திய அளவில், மூன்றாம் இடத்தைப் பெற்று, தமிழகத்திற்குப் பெருமையினைத் தந்துள்ளது.

## உ)அகில இந்திய சுற்றுலா மற்றும் வர்த்தகப்பொருட்காட்சி

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும், அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், செய்தித்துறையின் சார்பில், பொது மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்ற வகையில், அரசின் கொள்கைகள், நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த விளக்கப்படங்கள் மற்றும் காட்சி மாதிரிகளுடன் தனி அரங்கு அமைக்கப்படுகிறது.

## ஊ) புதுடெல்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி

புதுடெல்லியில் நடைபெறும் அகில இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழகத்தின் சார்பில், இத்துறை ஆண்டுதோறும் பங்கேற்று, தமிழக அரசின் அனைத்துத் துறைகள் தொடர்பான கொள்கை விளக்கங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் குறித்த விளக்கப் புகைப்படங்கள் மற்றும் காட்சிப் பொருட்கள் வாயிலாக, வெளிக்கொணரப்பட்டு வருகிறது. அகில இந்திய அளவில் நடைபெறும் இப்பொருட்காட்சியில், அனைத்து மாநிலங்களும் தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள்

மற்றும் சாதனைகளைக் குறிப்பாக, மக்கள் நல்வாழ்வு, உயர்கல்வி, ஊரகவளர்ச்சி ஆகிய துறைகளின் திட்டங்கள் மிகச் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருவதை அங்கீகரிக்கும் வகையில், மத்திய அரசால் விருதுகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதை அறிந்து கொள்ளும் நல்வாய்ப்பாக அமைந்துள்ளது. மகளிர் சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்படும் கைவினைப் பொருள்களுக்குச் சந்தை ஏற்படுவதோடு மேலும், இப்பொருட்காட்சிகள் வாயிலாக, பெரும்பான்மையோருக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கவும் வழி வகை செய்கிறது.

## எ) ஒளிப்படக் கண்காட்சி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள் பங்கு கொள்ளும் அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்கள் மற்றும் மாவட்டங்களில் நடைபெறும் முக்கியத் திருவிழாக்கள், ஆகியவற்றில், அரசின் சாதனைகள், நலத்திட்டங்கள் குறித்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்ற வகையில், ஒளிப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும், அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில், கிராமங்களில் நடத்தப்படும், மக்கள் குறை தீர்க்கும் மனு நீதி நாள் முகாம் நிகழ்ச்சிகளில், சிறிய அளவிலான, பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சி முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

## மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இன்றியமையாத இன்னுமொரு அங்கமே மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களாகும். தமிழகத்தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் செயல்படும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் அரசின் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளைக் குக்கிராமங்களுக்குக் கொண்டுச் செல்லும் சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அடித்தள மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு, அரசினால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள், நிகழ்த்தப்பட்டுள்ள சாதனைகள், புதிய அறிவிப்புகள் ஆகியவற்றை உடனுக்குடன் மக்களுக்குக் கொண்டு செல்லும் சிறப்பான பணியை, மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி மற்றும் விளம்பரம்) ஆகியோர் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர். மேலும் அரசின் திட்டங்கள் அனைத்தும் குக்கிராமங்களில் வாழும் ஏழை எளிய மக்களிடம் எடுத்துச் சென்றிடும் வகையில், நாளிதழ்கள், ஊடகங்கள், வீடியோ படக்காட்சிகள், ஒளிப்படக் கண்காட்சிகள் ஆகியவற்றின் வாயிலாக, அயராது களவிளம்பரப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கும் அரசு விழாக்களுக்கான முன்னேற்பாடு, செய்தியாளர் சந்திப்பு மற்றும் பயண ஏற்பாடு, தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி நிறுவனம் வாயிலாக விளம்பரப்பணி, பல்துறை விளக்கக் கண்காட்சிகள், வரலாற்றுத் தலைவர்களின் நினைவகங்களைப் பராமரித்தல் உள்ளிட்ட பல முக்கியப் பணிகளைத் திறம்பட மேற்கொண்டு, மாவட்ட நிருவாகத்திற்கும், தாம் சார்ந்துள்ள இத்துறைக்கும் பெருமையினைச் சேர்த்து வருகின்றனர்.

## செய்தி நிலையங்கள்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் செய்தி நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

செய்தி நிலையங்களில் மொழி, இலக்கியம், வரலாறு, அறிவியல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் நூல்கள், நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. மேலும், இச்செய்தி நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பள்ளி, கல்லூரி மாணவ–மாணவியர் பயன்படுத்திப் பயனடைந்து வருகிறார்கள்.

## மாநிலச் செய்தி நிலையம், சென்னை

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கலைவாணர் அரங்க வளாகத்தில் மாநிலச் செய்தி நிலையம் நூலகத்துடன் செயல்பட்டு வருகிறது.

இந்நூலகத்தில் தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, அரசியல், அறிவியல், ஆன்மீகம், சிறுவர் நூல்கள், ஆங்கில நூல்கள், தலைவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் சுமார் 58,090 நூல்கள் உள்ளன. மேலும், நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வார இதழ்கள் போன்றவைகளும் பொதுமக்கள் படித்துப் பயன்பெறுவதற்காக வைக்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை நடவடிக்கை தொடர்பான குறிப்புகள், பேரவை வெளியீடுகள், அரசுத்துறை வெளியீடுகள் ஆகியவை தொகுக்கப்பெற்று மேற்கோள் பணிக்காகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள நூல்கள் அரசின் மேற்கோள் பணிக்காகத் தேவைப்படும் பொழுது, அரசின் பயன்பாட்டிற்கு வழங்கப்படுகின்றன.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்கள் கல்விக்குத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் மற்றும் பள்ளியில் நடத்தப்படும் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி போன்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்றிடத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் மாநிலச் செய்தி நிலையத்தின் நூலகத்திற்குப் பெருமளவில் வருகை புரிகின்றனர். இந்நூலகத்திற்கு நாள்தோறும் ஏராளமான பொதுமக்களும் வருகை தந்து படித்துப் பயன்பெறுகின்றனர்.

### அ) நூலகத்தினை நவீன முறையில் மேம்படுத்துதல்

இந்நூலகத்திற்கு வருகை தரும் கல்லூரி மாணவ மாணவியர் மற்றும் பொது மக்களுக்குப் பெரிதும் உதவிடும் வகையில், **2016–2017**ஆம் நிதியாண்டில் **10.50** இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாநிலச் செய்தி நிலைய நூலகத்திலுள்ள புத்தகங்களைக் கணினியில் பதிவு செய்து எளிதாகத் தேடி எடுத்திட ஏதுவாக, நவீன மென்பொருள், துணைக்கருவிகள் கொண்ட நவீனக் கணினியும், இணைய வசதியும் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதோடு நூலகத்தின் வசதிகளை மேம்படுத்திடப் புத்தக அலமாரிகள், குடிநீர் வசதி, நகல் எடுக்கும் இயந்திரம், என பல வசதிகளை ஏற்படுத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### ஆ) பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவு

பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவுச் சட்டம் **1867**–ன்படி, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் புத்தகப் பதிவாளராகச் செயல்பட்டு வருவதன் அடிப்படையில், பல்வேறு பதிப்பகங்களின் வாயிலாக வெளியிடப்படும் புத்தகங்களின் இரண்டு பிரதிகள் பெறப்பட்டு முறையாகப் பதிவு செய்து பராமரிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## நிறைவுரை

“வெற்றி என்பது, ஒரே நாளில் அடைந்து, மறு நாளில் மறந்து போகிற இலக்கு அல்ல! அது ஒரு தொடர் பயணம்!” என்றார் மறைந்த மேனாள் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். வெற்றிக் கனிக்கு ஈடான சுவை வேறு எதற்குமே இவ்வுலகில் இல்லை.

வாழ்க்கையின் ஒவ்வொரு தினமும், ஒவ்வொரு கணமும் நம்முடைய உழைப்பை நாம் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்போதுதான் வெற்றியின் விலாசம் நமக்குக் கிடைக்கும் என்று, வெற்றியின் முகவரியை நாடுவோருக்குப் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வகுத்துத் தந்துள்ள வழியில், தமிழகமும் தமிழக மக்களும் நலமும் வளமும் காண நாளும் நல்லுழைப்பை நல்கி வீறுநடை போடுகின்ற, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி** அவர்களது தலைமையிலான மக்கள் நல அரசின் மாபெரும் மக்கள் நலத்திட்டங்களை, மகத்தான சாதனைகளை, மக்களிடம் எடுத்துச் செல்லுகின்ற இன்றியமையா கடமையை, செய்தி மக்கள் தொடர்புத்துறை சோர்விலா ஊக்கத்தோடும் சுடர்விடும் உற்சாகத்தோடும் தொடர்ந்து செயலாற்றும்.

**கடம்பூர் ராஜு**
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்

## இணைப்பு–1

## வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2018-2019

**தொகை**
**(ரூபாய் ஆயிரத்தில்)**

| | | 2016-2017 கணக்குகள் | 2017-2018 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2017-2018 திருத்த மதிப்பீடு | 2018-2019 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப் பணிகள் | 71,79 | 70,00 | 70,00 | 70,00 |
| 2220 | செய்தி மற்றும் விளம்பரம் | 78,32,75 | 71,45,37 | 1,33,58,48 | 85,10,59 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 1,07,61 | 1,03,50 | 1,28,88 | 1,42,20 |
| 2250 | ஏனைய சமூகப்பணிகள் | 12,22 | 13,94 | 15,40 | 17,56 |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | ––– | ––– | ––– | 20,00,00 |
| | **மொத்தம்** | **80,24,37** | **73,32,81** | **1,35,72,76** | **1,07,40,35** |




**சுவாமி சகஜானந்தா மணிமண்டபம் – சிதம்பரம்**



ஹைதர்அலி – திப்புசுல்தான் மணிமண்டபம் – திண்டுக்கல் மாவட்டம்



பட்டுக்கோட்டை அழகிரி சாமி மணிமண்டபம் – தஞ்சாவூர் மாவட்டம்




நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபம் – சென்னை



அம்மா
திரு. எடப்பாடி K. பழனிசாமி
ஓராண்டு சாதனைகள்





மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா
நினைவு மண்டபம் (மாதிரி) – சென்னை